# சிலாங்கூர் இன்று

இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2053 /சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் / டிசம்பர் 12 / 2022 December 12 /2022

# இன்சான் சிலாங்கூர் மக்கள் அனைவருக்கும் இலவச காப்புறுதி

இதன் தொடர்ச்சி பக்கம் 10-இல் பார்க்க




ஷா ஆலம்:-

சுமார் அறுபது லட்சம் மக்களுக்கு இலவச காப்புறுதி திட்டத்தை அமல்படுத்தும் தென்கிழக்காசியாவின் ஒரே மாநிலமாக சிலாங்கூர் விளங்குகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இன்சான் எனப்படும் சிலாங்கூர் பொது இலவச காப்புறுதி திட்டத்திற்கு உண்டாகும் செலவை மாநில அரசே முழுமையாக ஏற்றுக் கொள்வதாக பொதுத் தேர்தலில் கோம்பாக் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ஹராப்பான் வேட்பாளரான அவர் தெரிவித்தார்.பிற (நாடுகளிலுள்ள) மாநிலங்களில் இது கேள்விப்படாத ஒரு திட்டம் என்பதோடு இத்தகைய திட்டத்தை இதுவரை அமல்படுத்தியது இல்லை என்று அவர் குறிப்பிட்டார். கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் கடந்தாண்டு இறுதியில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரின் போது பலருக்கு காப்புறுதி பாதுகாப்பு இல்லை என்பதை அறிந்தோம்.

## பள்ளிக்கான ஒதுக்கீடு

# கடப்பாட்டின் அடையாளம்

**கோலாலம்பூர்:- மலேசியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தோட்டங்கள் தோறும் தமிழ்ப்பள்ளிகள் அமைப்பதிலும் ஆலயங்கள் அமைப்பதில் நம் முன்னோர்கள் வெற்றி கண்டனர்.**

அந்நாளில் சுமார் 1500 தமிழ்ப் பள்ளி பள்ளிகள் மட்டுமின்றி, மற்ற எல்லா மொழிப் பள்ளிகளை விட தமிழ்ப்பள்ளியே முன் தோன்றியதற்கான அடையாளத்தை கோலாலம்பூர் சன் பெங் தமிழ்ப்பள்ளி கொண்டுள்ளதாகவும், அது பினாங்கு பிரி ஆங்கிலப் பள்ளிக்கு முன் அடையப்பட்டதாக சொல்லப்படுகிறது.

ஆனால் சுதந்திர மலேசியாவில் நமது பள்ளிகளின் அடிச்சுவட்டை அழிக்கும் விதமாக ஆளும் பாரிசான் அரசாங்கம் நடந்து கொண்டதால், தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 520க்கு இறங்கியது.

ஆனால் 2007ம் ஆண்டு இந்திய சமுதாயத்தின் எழுச்சிக்கு பின், நாட்டில் சிலாங்கூர் உட்பட பல மாநிலங்களில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தாமல் இருந்திருந்தால் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கையில் இன்னும் மோசமாக வீழ்ச்சி அடைந்திருக்கும்.

2008 ஆம் ஆண்டில் சிலாங்கூரில் பக்காத்தான் ராயாட் அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கை தமிழ்ப்பள்ளிகளுக்கு மானியம் ஒதுக்கீடு. தமிழ்ப்பள்ளிகளில் நிலவி வந்த அடிப்படை பிரச்சனைகளை தீர்க்க நடவடிக்கை மேற்கொண்டது.

அதில் மாணவர்களுக்கான மேசை நாற்காலிகள் முதல் கழிவறை, பள்ளி மண்டபம் வரையிலும், பள்ளிக்கு செல்லும் சாலை முதல் கட்டுமானங்கள் வரை அடங்கும்.அடுத்த கட்டமாக நீண்ட காலமாக ரப்பர் பால் உலர்த்தும் அசாப் கொட்டகை போல் காட்சி தந்து வந்த தமிழ்ப்பள்ளிகளுக்கான புதிய தோற்றத்தை வழங்கும் முன் முயற்சியாக



**2009ம் ஆண்டில் ஷா ஆலம் மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியின் கட்டிடத்தை, முழுக்க இந்தியர்களை கொண்டு எழுப்பியது மிக சிறிய செலவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அமரும் மண்டபத்துடன் கட்டியது, தமிழ்ப் பள்ளிகளின் புதிய வரலாறு ஆகும்.**

அது தமிழ்ப்பள்ளி அமைப்புகள் பெற்றோர்கள் மற்றும் இந்திய அரசியல் கட்சிகளிடையே புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

எங்களாலும் கட்ட முடியும் என்று பல இந்திய குத்தகையாளர்கள் நாடு முழுவதும் தமிழ்ப்பள்ளிகளை கட்டும், மேம்படுத்தும் குத்தகைகளை அரசாங்கத்திடம் பெற்றனர்.பல இடங்களில் புதிய கட்டடங்களும், தோற்றம் மேம்பாடுகளும் ஏற்பட்டது. பக்காத்தான் ஆளும் சிலாங்கூரில் நாம் எதை மேற்கொண்டாலும் அதற்கு போட்டியாக மத்திய அரசும், மற்ற மாநிலங்களும் செய்கின்றன.

**அதன் அடிப்படையில் நாம் இங்கு பாலர் பள்ளிகளை ஆரம்பித்தோம் மத்திய அரசும் போட்டிக்கு பாலர் பள்ளிகளை வழங்கியது.நாம் 30 லட்சம் வெள்ளிகளில் சிலாங்கூர் மாநில தமிழ்ப்பள்ளி மேம்பாட்டு நிதியை ஆரம்பித்தோம், இன்றைய மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அதனை 50 லட்சமாக உயர்த்தி வழங்கி வருகிறார்.**

பக்காத்தான் மாநிலங்களில் வழங்கப்படும் இந்த மானியம் பாரிசான் ஆளும் மாநிலங்களிலும் வழங்கப்பட வேண்டும். அப்படி கொடுக்காத மாநிலங்களின் ஆட்சியை மாற்ற இந்தியர்கள் முன் வர வேண்டும்.

சிலாங்கூர் பக்காத்தான் ஹராப்பான் ஆட்சி அடுத்து எடுத்து வைத்துள்ள முன் முயற்சி மாணவர் தங்கும் விடுதி. அது எல்லா மாநிலங்களிலும் தோற்றுவிக்கப்பட வேண்டும்.சிலாங்கூர் மாநில 98 தமிழ்ப்பள்ளிகளுக்கான பக்காத்தான் ஹராப்பான் மாநில அரசு வழங்கும் ஆண்டு மானியம் குறித்த பட்டியலை மக்கள் பார்த்து தெரிந்து கொள்ள கீழ் காணும் பட்டியலை இணைத்துள்ளோம்.

தொடர்ச்சி பக்கம் 2

| எண் | தமிழ் பள்ளி பெறுநரின் பட்டியல் | பள்ளி குறியீடு | தொகுதி குறியீடு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | தேசிய வகை துன் சம்பந்தன் தமிழ்ப்பள்ளி | SJKT 46 | N31 சுபாங் ஜெயா | 50,000.00 |
| 2. | தேசிய வகை சீபீல்டு தோட்ட தமிழ்ப்பள்ளி | SJKT 60 | N31 சுபாங் ஜெயா | 35,000.00 |
| 3. | தேசிய வகை கிளன்மேரி தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 55 | N32 ஸ்ரீ செத்தியா | 50,000.00 |
| 4. | தேசிய வகை விவேகானந்தா தமிழ்ப்பள்ளி, பெட்டாலிங் ஜெயா | SJKT 37 | N34 புக்கிட் காசிங் | 70,000.00 |
| 5. | தேசிய வகை ஆர்.ஆர்.ஐ தமிழ்ப்பள்ளி | SJKT 40 | N39 கோத்தா டமான்சாரா | 55,000.00 |
| 6. | தேசிய வகை ஈபோர் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 20 | N41 பத்து தீகா | 50,000.00 |
| 7. | தேசிய வகை சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளி | SJKT 68 | N41 பத்து தீகா | 80,000.00 |
| 8. | தேசிய வகை பண்டார் மக்கோத்தா செராஸ் தமிழ்ப்பள்ளி | SJKT 101 | N25 காஜாங் | 50,000.00 |
| 9 | தேசிய வகை பாங்கி தமிழ்ப்பள்ளி | SJKT 92 | N26 சுங்கை ரமால் | 60,000.00 |
| 10 | தேசிய வகை வெஸ்ட் கண்ட்ரி (கிழக்கு) தமிழ்ப்பள்ளி | SJKT 96 | N26 சுங்கை ரமால் | 30,000.00 |
| 11 | தேசிய வகை மேற்குத் தமிழ்ப்பள்ளி கேரித்தீவு | SJKT 48 | N51 சிஜங்காங் | 65,000.00 |
| 12 | தேசிய வகை சுங்கை சீடு தமிழ்ப்பள்ளி | SJKT 101 | N52 பந்திங் | 40,000.00 |
| 13 | தேசிய வகை சுங்கை மங்கிஸ் தமிழ்ப்பள்ளி | SJKT 32 | N52 பந்திங் | 40,000.00 |
| 14 | தேசிய வகை சிம்பாங் மோரிப் தமிழ்ப்பள்ளி | SJKT 8 | N53 பந்திங் | 40,000.00 |
| 15 | தேசிய வகை காந்திஜி தமிழ்ப்பள்ளி | SJKT 57 | N09 சுங்கை பூரோங் | 30,000.00 |
| 16 | தேசிய வகை மேரி தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 95 | N09 பெர்மாதாங் | 25,000.00 |
| 17 | தேசிய வகை ராஜா மூசா தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 26 | N09 பெர்மாதாங் | 40,000.00 |
| 18 | தேசிய வகை சுங்கை திங்கி தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 61 | N09 பெர்மாதாங் | 40,000.00 |
| 19 | தேசிய வகை ரிவர்சைடு தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 39 | N09 பெர்மாதாங் | 40,000.00 |
| 20 | தேசிய வகை கோலா சிலாங்கூர் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 72 | N10 புக்கிட் மெலாவத்தி | 50,000.00 |
| 21 | தேசிய வகை பெஸ்தாரி ஜெயா தமிழ்ப்பள்ளி | SJKT 82 | N11 ஈஜோக் | 50,000.00 |
| 22 | தேசிய வகை துவான் மீ தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 81 | N12 ஜெராம் | 40,000.00 |
| 23 | தேசிய வகை தாமான் பெர்மாத்தா தமிழ்ப்பள்ளி | SJKT 69 | N55 டிங்கில் | 65,000.00 |
| 24 | தேசிய வகை டிங்கில் தமிழ்ப்பள்ளி | SJKT 56 | N55 டிங்கில் | 65,000.00 |
| 25 | தேசிய வகை சிப்பாங் தமிழ்ப்பள்ளி | SJKT 35 | N56 சுங்கை பிலேக் | 70,000.00 |
| 26 | தேசிய வகை அம்பாங் தமிழ்ப்பள்ளி | SJKT 58 | N19 புக்கிட் அந்தாராபங்சா | 50,000.00 |
| 27 | தேசிய வகை ரிஞ்சிங் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 31 | N24 செமினி | 70,000.00 |
| 28 | தேசிய வகை டொமினியன் தமிழ்ப்பள்ளி | SJKT 29 | N24 செமினி | 20,000.00 |
| 29 | தேசிய வகை வெஸ்ட் கண்ட்ரி (மேற்கு) தமிழ்ப்பள்ளி | SJKT 70 | N55 டிங்கில் | 40,000.00 |
| 30 | தேசிய வகை அம்பர் தெனாங் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 44 | N55 டிங்கில் | 55,000.00 |
| 31 | தேசிய வகை பண்டார் பாரு சாலாக் திங்கி தமிழ்ப்பள்ளி | SJKT 62 | N56 சுங்கை பிலேக் | 50,000.00 |
| 32 | தேசிய வகை பியூட் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 45 | N56 சுங்கை பிலேக் | 20,000.00 |
| 33 | தேசிய வகை புக்கிட் ஈஜோக் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 16 | N56 சுங்கை பிலேக் | 50,000.00 |
| 34 | தேசிய வகை பத்து ஆராங் தமிழ்ப்பள்ளி | SJKT 19 | N13 குவாங் | 60,000.00 |
| 35 | தேசிய வகை ஐக்கோம் தமிழ்ப்பள்ளி | SJKT 67 | N50 கோத்தா கெமுனிங் | 50,000.00 |
| 36 | தேசிய வகை நோர்த் ஹம்மோக் தமிழ்ப்பள்ளி | SJKT 98 | N40 கோத்தா அங்கெரிக் | 50,000.00 |
| 37 | தேசிய வகை மிட்லண்ட்ஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 18 | N40 கோத்தா அங்கெரிக் | 50,000.00 |
| 38 | தேசிய வகை கம்போங் பாரு தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 27 | N09 பெர்மாதாங் | 45,000.00 |
| 39 | தேசிய வகை சுங்கை திராப் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 25 | N09 பெர்மாதாங் | 40,000.00 |
| 40 | தேசிய வகை ஹோப்புள் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 28 | N09 பெர்மாதாங் | 20,000.00 |
| 41 | தேசிய வகை வாகீசர் தமிழ்ப்பள்ளி | SJKT 89 | N10 புக்கிட் மெலாவத்தி | 50,000.00 |
| 42 | தேசிய வகை செமினி தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 30 | N24 செமினி | 70,000.00 |
| 43 | தேசிய வகை காஜாங் தமிழ்ப்பள்ளி | SJKT 90 | N25 காஜாங் | 80,000.00 |
| 44 | தேசிய வகை தெற்குக் கேரித்தீவு தமிழ்ப்பள்ளி | SJKT 22 | N51 சிஜங்காங் | 55,000.00 |
| 45 | தேசிய வகை தெலுக் பங்லிமா காராங் தமிழ்ப்பள்ளி | SJKT 11 | N51 சிஜங்காங் | 75,000.00 |
| 46 | தேசிய வகை கேரித்தீவு கிழக்குத் தமிழ்ப்பள்ளி | SJKT 23 | N51 சிஜங்காங் | 40,000.00 |
| 47 | தேசிய வகை தெலுக் டத்தோ தமிழ்ப்பள்ளி | SJKT 9 | N52 பந்திங் | 60,000.00 |
| 48 | தேசிய வகை ஜென்ஜாரோம் தமிழ்ப்பள்ளி | SJKT 45 | N52 பந்திங் | 40,000.00 |
| 49 | தேசிய வகை ஜுக்ரா தமிழ்ப்பள்ளி | SJKT 5 | N53 மோரிப் | 55,000.00 |
| 50 | தேசிய வகை சுங்கை புவாயா தமிழ்ப்பள்ளி | SJKT 7 | N53 மோரிப் | 40,000.00 |
| 51 | தேசிய வகை காடோங் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 14 | N54 தஞ்சோங் சிப்பாட் | 40,000.00 |
| 52 | தேசிய வகை தெலுக் மெர்பாவ் தமிழ்ப்பள்ளி | SJKT 36 | N54 தஞ்சோங் சிப்பாட் | 50,000.00 |
| 53 | தேசிய வகை தும்போக் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 15 | N54 தஞ்சோங் சிப்பாட் | 50,000.00 |
| 54 | தேசிய வகை சிலாங்கூர் ரிவர் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 77 | N10 புக்கிட் மெலாவத்தி | 50,000.00 |
| 55 | தேசிய வகை சுங்கை ரம்பை தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 71 | N10 புக்கிட் மெலாவத்தி | 40,000.00 |
| 56 | தேசிய வகை பிரவுண்ஸ்டன் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 12 | N10 புக்கிட் மெலாவத்தி | 40,000.00 |
| 57 | தேசிய வகை புக்கிட் ரோத்தான் தமிழ்ப்பள்ளி | SJKT 84 | N10 ஈஜோக் | 40,000.00 |
| 58 | தேசிய வகை கோல்பீல்ஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 78 | N11 ஈஜோக் | 40,000.00 |
| 59 | தேசிய வகை புக்கிட் செராக்கா தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 79 | N12 ஜெராம் | 40,000.00 |
| 60 | தேசிய வகை சுங்கை பூலோ தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 83 | N10 புக்கிட் மெலாவத்தி | 40,000.00 |
| 61 | தேசிய வகை ஹைலண்ட்ஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 75 | N48 செந்தோசா | 80,000.00 |
| 62 | தேசிய வகை பத்து அம்பாட் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 50 | N48 செந்தோசா | 50,000.00 |
| 63 | தேசிய வகை தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளி | SJKT 100 | N48 செந்தோசா | 60,000.00 |
| 64 | தேசிய வகை சிம்பாங் லீமா தமிழ்ப்பள்ளி | SJKT 3 | N49 சுங்கை காண்டீஸ் | 100,000.00 |
| 65 | தேசிய வகை பத்து எமரால்டு தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 74 | N50 கோத்தா கெமுனிங் | 80,000.00 |
| 66 | தேசிய வகை பெர்சியாரான் ராஜா மூடா மூசா தமிழ்ப்பள்ளி | SJKT 47 | N46 போர்ட் கிள்ளான் | 40,000.00 |
| 67 | தேசிய வகை வல்லம்புரோசா தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 43 | N42 மேரு | 50,000.00 |
| 68 | தேசிய வகை குவாங் தமிழ்ப்பள்ளி | SJKT 65 | N13 குவாங் | 50,000.00 |

இதன் தொடர்ச்சி 10-ஆம் பக்கம் பார்க்க

# மக்களுக்கு உதவுவதில் பாரிசான், பெரிக்காத்தான் தோல்வி

## சிறப்பான ஆட்சிக்கு ஹராப்பானை தேர்ந்தெடுங்கள்

கோம்பாக்:-

வரும் பதினைந்தாவது பொதுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை வழங்குவதன் மூலம் நாட்டை வழி நடத்துவதற்குரிய வாய்ப்பினை பக்கத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு வழங்குமாறு நாட்டு மக்களை டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கேட்டுக் கொண்டார்.

தோல்வியடைந்த கட்சிகளான பாரிசான் நேஷனல் மற்றும் பெரிக்காத்தான் நேஷனலிடம் நாட்டின் எதிர்காலத்தை பணயம் வைக்க வேண்டாம் என கெஅடிலான் கட்சியின் உதவித் தலைவருமான அவர் வலியுறுத்தினார்.

நெருக்கடியான தருணங்களில் கூட நாட்டை சிறப்பான முறையில் வழிநடத்தும் ஆற்றல்மிக்கவராக ஹராப்பான் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் விளங்குகிறார் என்று கோம்பாக் தொகுதி ஹராப்பான் வேட்பாளருமான அவர் சொன்னார்.

பெரிக்காத்தான் நேஷனல் டான்ஸ்ரீ மொகிடின் யாசினை பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்துள்ளது. தேசிய முன்னணி டத்தோஸ்ரீ அகமது ஜாஹிட் அல்லது டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப்பை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தியுள்ளது. இவர்கள் அனைவரும் அரசாங்கத்தை நிர்வகிப்பதில் தோல்வி கண்டவர்களாவர் என அவர் குறிப்பிட்டார்.

கோம்பாக் தொகுதியை தக்க வைத்துக் கொள்வதற்கு போட்டியிடும் டத்தோஸ்ரீ



அஸ்மின் அலி அந்த தோல்வி கண்ட அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருந்தார். அவர்களின் ஆட்சியில்தான் அதிகமானோர் தற்கொலை செய்து கொண்டனர், உணவுப் கிடைக்கவில்லை எனக் கூறி வெள்ளைக் கொடி ஏந்தினர் என்றார் அவர்.

இங்குள்ள கம்போங் சங்காட் கிரியில் நேற்றிரவு நடைபெற்ற மக்கள் விருந்து நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.



# மாநில அரசின் மலிவு விற்பனை மார்ச் வரை நீடிப்பு

## பொது மக்கள் மகிழ்ச்சி

உலு கிள்ளான்:-

அத்தியாவசியப் பொருள் மலிவு விற்பனையை அடுத்தாண்டு மார்ச் மாதம் வரை நீட்டிப்பதற்கு மாநில அரசு எடுத்துள்ள முடிவை பொது மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இதன் மூலம் சமையல் பொருள்களை வாங்குவதற்கு உண்டாகும் செலவினத்தை குறைக்க முடியும் என்பதோடு தரமான உணவு மூலப்பொருள்களையும் வாங்க முடியும் என்று அவர்கள் கூறினர்.

இந்த விற்பனை மூலம் மலிவான விலையில் கோழி, அரிசி, முட்டை போன்ற பொருள்களை வாங்குவதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளதாக முன்னாள் தாதியான ஜமாலியா அபு சமா (வயது 65) கூறினார்.

இந்த விற்பனைத் திட்டத்தை நீட்டிப்பதற்கு அங்கீகாரம் வழங்கிய மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரிக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். ஓய்வூதியப் பணத்தில் வாழ்க்கையை நடத்தும் எங்களுக்கு இந்த திட்டம் பெரிதும் உதவியாக உள்ளது என அவர் சொன்னார்.

மாநில அரசின் இந்த ஏசான் ராக்யாட் திட்டம் தங்கள் பகுதியில் எப்போது நடைபெறுகிறது என்பதை தெரிந்து கொள்ள அதன் வியாபார இடங்கள் தொடர்பான அட்டவணையை தாம் தொடர்ந்து கண்காணித்து வருவதாக தனித்து வாழும் தாயான ரோசிடா சீடேக் (வயது 43) தெரிவித்தார்.

இந்த மலிவு விற்பனைத் திட்டத்தின் மூலம் சமையல் பொருள்களை வாங்குவதற்குரிய செலவினை கட்டுப்படுத்த முடிவதாக உணவகம் ஒன்றில் பகுதி நேரமாக வேலை செய்து வரும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மலிவு விற்பனைத் திட்டம் தொடர்வது மகிழ்ச்சியை அளிக்கிறது. அடுத்தாண்டு நோன்புப் பெருநாள் வரை இதனை நீட்டித்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என அவர் கூறினார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை மலிவான விலையில் விற்பதன் மூலம் செலவினத்தைக் குறைக்க உதவிய மாநில அரசுக்கு தாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்வதாக மாட் யூசுப் யூனஸ் (வயது 68) தெரிவித்தார்.

# பேரிடர் காலத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்தது பெருந்தவறு– மந்திரி புசார் சாடல்




கிள்ளான்:-

பதினைந்தாவது பொதுத் தேர்தலை நடத்துவதற்காக பேரிடர் காலத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்தது பெருந்தவறு என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி சாடினார். இத்தகைய பேரிடர்களால் பொது மக்கள் மட்டுமின்றி தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள மாவட்ட அதிகாரிகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று அவர் சொன்னார். இக்காலக்கட்டத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்தது ஒரு தவறான முடிவு என நான் கருதுகிறேன். இதனால் பொது மக்கள் மட்டுமின்றி அதிகாரிகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். உதாரணத்திற்கு கிள்ளான் மற்றும் பெட்டாலிங் மாவட்ட அதிகாரிகள் தேர்தல் நிர்வாகிகளாகவும் பணியாற்றுகின்றனர். அதே சமயம், வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டிய கடமையும் அவர்களுக்கு உள்ளது என்றார் அவர். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை இங்குள்ள ஜோஹான் செத்தியா தேசிய பள்ளியில் சென்று கண்டு உதவிப் பொருள்களை வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். பேரிடர் ஏற்படும் பட்சத்தில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் உதவ தயார் நிலையில் இருக்கும்படி தன்னார்வலர்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அமிருடின் சொன்னார்.

வெள்ளம் பாதித்த இடங்களில் டீம் சிலாங்கூர் மற்றும் சிலாங்கூர் தன்னார்வலர் (செர்வ்) குழு உறுப்பினர்கள் தயார் நிலையில் உள்ளனர். தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையிடம் பயிற்சி பெற்றுள்ளதால் அவர்கள் தேடி மீட்கும் பணியில் ஈடுபடுவதற்கும் தயாராக இருக்கின்றனர் என்றார் அவர்.



# நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் இளைஞர், கல்வி, உணவு விவகார பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தருவேன்

கோம்பாக்:-

15வது பொதுத் தேர்தலில் கோம்பாக் வாக்காளர்கள் தன்னை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுத்தால் இளைஞர், கல்வி, உணவு விவகார பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தருவேன் என குறிப்பிட்டார் ஹராப்பான் வேட்பாளர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி

இவ்விவகாரங்கள் நீண்ட நாட்களாக தன் மனதில் உள்ளதாகவும் மக்களுக்கும் நாட்டுக்கும் சிறந்த எதிர்காலத்திற்கு இந்த விவகாரங்கள் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார். "நாடாளுமன்றத் திற்கான வேட்பாளர்களாக, இங்குள்ள கோம்பாக் நாடாளுமன்ற மக்களின் தலைவிதி மற்றும்



உரிமைகள் மீதான மேலதிகமாக தேசியக் கொள்கைகள் பற்றிய விவாதத்தில் "கல்விக் கொள்கை, உணவு விநியோகத்தை உறுதி செய்தல் மற்றும் இளம் தலைமுறையினரின் வளர்ச்சி போன்ற பிரச்சினைகள் வாய்ப்பு கிடைத்தால் நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும்" என்று அவர் இங்குள்ள பிளாட் தாமான் சமுத்திரத்தில் குடியிருப்பாளர்கள் உடனான தேநீர் உபசரிப்புக்கு பிறகு கூறினார்.

இதற்கிடையில், நில மேலாண்மை, மக்களின் தலைவிதி, கல்வி, பொருளாதாரம் மற்றும் பெண்கள் உள்ளிட்ட பிரச்சனைகள் விவாதிக்கப்படும் என்று டத்தோ மந்திரி புசார் கூறினார். முன்னதாக அவர் அப்பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளி நோயாளி ரத்னா ஜூதா அம்ரன், 52, மற்றும் நோயால் கிட்டத்தட்ட பார்வையற்ற முதியவர் எம். சுப்பிரமணியம், 68, உட்பட பல வீடுகளுக்குச் சென்று நலம் விசாரித்தார். கெஅடிலான் மக்கள் கட்சியின் துணைத் தலைவரான அமிருடின் மற்ற நான்கு போட்டியாளர்களுக்கு எதிராக வாக்குச் சீட்டில் இரண்டாவது வேட்பாளராக தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டார்.



# நாடாளுமன்ற உறுப்பினர் சம்பளத்தை பெற மாட்டேன்

## கோம்பாக் சமூக நல நிதியில் சேர்ப்பேன்

கோம்பாக்:-

வரும் பொதுத் தேர்தலில் கோம்பாக் தொகுதியில் வெற்றி பெற்றால் நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத்தை தாம் பெறப் போவதில்லை என்று தொகுதி ஹராப்பான் வேட்பாளர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அறிவித்துள்ளார். அந்த சம்பளத் தொகையை புதிதாக உருவாக்கப்படும் கோம்பாக் மக்கள் சமூக நல நிதியில் தாம் சேர்க்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.சம்பளத்திற்காகவும் பதவிக்காகவும் தாம் கோம்பாக் தொகுதியில் போட்டியிடவில்லை என்றும் மாறாக, தொகுதியில் மாற்றத்தை ஏற்படுத்தவும் கோம்பாக்கின் கௌரவத்தை காக்கவும் இத்தேர்தலில் களம் காண்பதாக அவர் சொன்னார். இத்தொகுதியில் வெற்றி பெற்றால் நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத்தில் ஒரு காசைக் கூட நான் தொட மாட்டேன். அந்த பணத்தைக் கொண்டு தொகுதி மக்களின் நலன் காப்பதற்காக நிதி ஒன்றை ஆரம்பிப்பேன் என்றார் அவர்.

இந்த நிதியில் எனது சம்பளப் பணத்தை சேர்ப்பதோடு முதலீட்டாளர்களிடமிருந்தும் நிதி பெற்று கோம்பாக் தொகுதி மக்களுக்கான சமூக நலப் பணிகளை மேற்கொள்வேன் என்று அவர் மேலும் சொன்னார்.

மக்கள் வழங்கிய ஆதரவை மறந்து கட்சித் தாவிய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் செயலையும் அமிருடின் கடுமையாகச் சாடினார்.

தவளையாக மாறி தாவிச் சென்றார். அந்த நாடாளுமன்ற உறுப்பினரின் இச்செயலைக் கண்டு நாங்கள் வெட்கப்படுகிறோம். இம்முறை அவருக்கு ஓய்வு கொடுத்து விட்டு ஹராப்பான் வேட்பாளரை தேர்ந்தெடுங்கள். வாக்குச் சீட்டில் இரண்டாம் எண்ணைக் கொண்ட அமிருடினை தேர்ந்தெடுங்கள் என அவர் கேட்டுக் கொண்டார்.

# கோம்பாக் பெண்கள் கூடுதல் வருமானம் ஈட்ட உதவும் திறன் பயிற்சி பெற வாய்ப்பு

கோம்பாக்:-

கோம்பாக் நாடாளுமன்ற தொகுதியில் வாழும் பெண்கள் தங்கள் குடும்பங்களுக்கு கூடுதல் வருமானம் ஈட்ட உதவும் திறன் பயிற்சி பெற வாய்ப்பு உள்ளது.

நவம்பர் 19-ம் தேதி கோம்பாக் நாடாளுமன்றத்தில் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி வெற்றி பெற்றால் இச்சலுகையை செயல்படுத்துவார் என்ற நல்ல செய்தியும் உள்ளது.

“கூடுதல் திறன் பயிற்சியுடன் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக பெண்கள் உருவெடுக்க உதவும். பெண்களுக்கு திறன் பயிற்சிகள் அளிப்பதன் வழி அவர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக இருக்கும் வேளையில், குடும்ப வருமானத்தை அதிகரிக்கவும் முடியும்” என்று கோம்பாக் கண்ணியம் பிரகடனத்தை அறிவிக்கும் போது கூறினார்.

பெண்களின் குடும்ப வருமானத்தை அதிகரிக்க உதவுவதற்காக, யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் நிர்வகிக்கும் டாருல் ஏசான் வணிகத் திட்டத்தின் (நாடி) மூலம் ஆரம்ப மூலதனமாக வெ.5,000 வரையிலான நிதியை மாநில அரசு வழங்குகிறது.

இந்த உதவி திட்டம் இந்த ஆண்டு மொத்தம் வெ.86.1 லட்சம் நிதியுதவியுடன் 1,722 விண்ணப்பதாரர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கோம்பாக்கில் உள்ளூர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நகர்ப்புற விவசாய நடவடிக்கைகளையும் அதிகரிப்பதாக அமிருடின் கூறினார்.

“நகர்ப்புற விவசாய நடவடிக்கைகளின் வழி உருவாக்கப்படும் உலுயாம் மற்றும் ஜாலான் கோம்பாக் போன்ற பசுமையான பகுதிகளின் திறனை நாங்கள் மதிப்பிடுவோம்,” என்று அவர் கூறினார்.




# தேர்தல் பிரசாரம் ரத்து- வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காண விரைந்தார் அமிருடின்

ஷா ஆலம்:-

கிள்ளான் மற்றும் பெட்டாலிங் மாவட்டங்களில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களைச் சென்று காண்பதற்காக கோம்பாக் தொகுதியில் நேற்றிரவு மேற்கொள்ளவிருந்த பிரசாரத்தை டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி ரத்து செய்தார்.

தற்காலிக துயர் துடைப்பு மையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட துறைகளுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாக அவர் சொன்னார்.

கோம்பாக் தொகுதியில் இன்றிரவு நடைபெறவிருந்து தேர்தல் பிரசாரத்தை ரத்து செய்து விட்டு கிள்ளான் மற்றும் பெட்டாலிங் மாவட்டங்களில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காண விரைகிறேன் என்று அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட வர்களுக்கு



உடனடி உதவிகளை வழங்குவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வருகிறேன். மக்கள் பிரச்சனைகளிலிருந்து விரைவில் மீளவும் பாதுகாப்பாக இருக்கவும் இறைவனை வேண்டுகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அடை மழை காரணமாக கிள்ளான் மற்றும் பெட்டாலிங் மாவட்டங்களின் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக கிள்ளான், மேரு மற்றும் காப்பார் ஆகிய பகுதிகளுக்கு மீட்பு தளவாடங்களை மாநில அரசு உடனடியாக அனுப்பியது.



# கோம்பாக் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும், 1,660 மலிவு விலை வீடுகள்

கோம்பாக்:-

கோம்பாக் குடியிருப்பாளர்களின் தேவைக்காக இரண்டு திட்டங்களின் மூலம் 1,660 மலிவு விலை வீடுகள் கட்டப்படுவதை டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி உறுதி செய்வார்.

பக்காத்தான் ஹராப்பான் கோம்பாக் நாடாளுமன்றத்திற்கான வேட்பாளர், தாமான் ஸ்ரீ கோம்பாக் இல் உள்ள பாயு குடியிருப்பு @செரி தெமெங்கோங் அபார்ட்மெண்ட் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளுடன் கூடியதாக இருக்கும் என்றார்.

கோம்பாக் நாடாளுமன்றத்தில் வெற்றி பெற்றால் அமிருடின் செயல்படுத்தும் சலுகைகளில்,“ கண்ணியமான கோம்பாக்” பிரகடனத்தில் இந்த உறுதிமொழி இணைக்கப்பட்டுள்ளது.

# தோல்வி கண்ட தலைவர்களை நிராகரியுங்கள் வாக்காளர்களுக்கு அன்வார் கோரிக்கை



ஷா ஆலம்யீ-

பலர் வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்பினை இழக்கும் அளவுக்கு நாட்டை முறையாக நிர்வகிப்பதில் தோல்வி கண்ட தலைவர்களை நிராகரிக்கும்படி வாக்காளர்களை டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கேட்டுக் கொண்டார்.

தங்கள் எதிர்காலத்தையும் நாட்டின் நிலைத்தன்மையையும் பொதுமக்கள் தீர்மானிக்கக்கூடிய களமாக இந்த பொதுத் தேர்தல் விளங்குவதாக பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியின் தலைவரான அன்வார் கூறினார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு மட்டுமின்றி எதிர்காலத்திற்கும் தங்களின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கு சரியான முடிவை இத்தேர்தலில் எடுக்கும்படி பொதுக்களை நான் கேட்டுக் கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டார்.

மக்கள் நலனுக்காக உண்மையில் போராடும் ஒரே கூட்டணி பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியாகும் என்று நேற்றிரவு தம்புனில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது அவர் தெரிவித்தார்.

நாட்டில் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்டிருந்த போது நிலையான பொருளாதாரக் கொள்கையை அமல்படுத்தத் தவறிய டான்ஸ்ரீ மொகிதின் யாசின் நிர்வாகத்தை இனியும் மக்கள் நம்பத் தயாராக இல்லை என்று அவர் சொன்னார்.

மாறாக, அச்சமயத்தில் இறப்பு விகிதம் தொடர்ந்து அதிகரித்து வந்தது. நாட்டின் பொருளாதார கொள்கைகளையும் முறையையும் மாற்றுவதற்குரிய வாய்ப்பு அப்போதைய பெரிக்கத்தான் அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனாலும், அது அவ்வாறு செய்யவில்லை என்றார் அவர்.

வருமானத்திற்கான வழிகளை இழந்து வெள்ளைக் கொடிகளை ஏந்தும் அளவுக்கு மக்கள் சிரமத்தில் ஆழ்ந்திருந்த போது 70 அமைச்சர்களையும் பல சிறப்பு தூதர்களையும் நியமித்தது பெரிக்கத்தான் அரசு செய்த பெரிய தவறாகும் எனவும் அவர் சொன்னார்.

# இரண்டு தவணைக்கு மட்டுமே பிரதமர் பதவி

## பக்கத்தான் ஹராப்பான் பரிந்துரைக்கு பொது மக்கள் வரவேற்பு




ஷா ஆலம்:-

பிரதமர் பதவியை இரு தவணைகளாக கட்டுப்படுத்தும் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியின் பரிந்துரையை பொதுமக்கள் வரவேற்றுள்ளதோடு நாட்டின் மேம்பாட்டிற்கு இத்திட்டம் பெரிதும் துணை புரியும் என்று கூறியுள்ளனர்.

அரசு நிர்வாகத்தில் உயர்நெறியை வலுப்படுத்துவதற்கும் அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதை தவிர்ப்பதற்கும் வெளிப்படையான நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்கும் ஏதுவாக பிரதமர் பதவியை பத்து ஆண்டுகளாக அல்லது இரு தவணைகளாக கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரையை ஹராப்பான் கூட்டணி முன்வைத்துள்ளது.

இந்த பரிந்துரை குறித்து சிகிஞ்சான் மற்றும் சுங்கை புசார் பகுதி மக்களிடம் கருத்து கேட்ட போது அவர்களில் பலர் சிறப்பான இந்த பரிந்துரை அமல்படுத்தப்பட வேண்டும் எனக் கூறினர்.

ஹராப்பான் கூட்டணி கொண்டு வந்த நல்ல திட்டம் இதுவாகும். இது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளாமல் போவதில் எனக்கு உடன்பாடில்லை என்று அரசு ஊழியரான நோர்ஃபரேஹான் ஒஸ்மான் (வயது 29) கூறினார்.

பல வெளிநாடுகளில் அமல்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டம் மலேசியாவிலும் அமல்படுத்தப்படுவதன் மூலம் சிறப்பான வளர்ச்சியைக் காண இயலும் என்று டுரியான் வியாபாரியான கான் கார் ஆன் (வயது 35) கூறினார்

பிரதமர் பதவியை பத்து ஆண்டுகளாக அல்லது இரு தவணைகளாக குறைப்பதன் மூலம் ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்தை தடுக்க இயலும் என்று மெக்கானிக்கான ஹோ தென் ஹுஃவா (வயது 38) சொன்னார்.

# சிலாங்கூர் வாக்களிக்கும் நாளுக்கு முன் ஒரு நாள் விடுமுறை அளிக்கிறது, இதனால் வாக்காளர்கள் வீடு திரும்புவதை எளிதாக்குகிறது



ஷா ஆலம்:-

சிலாங்கூருக்கு வெளியே உள்ள வாக்காளர்கள் தங்கள் கிராமங்களுக்கு திரும்புவதை எளிதாக்கும் வகையில் நவம்பர் 19-ஆம் தேதி வாக்களிக்கும் நாளுக்கு முன்னதாக ஒரு நாள் விடுமுறை அளிக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. பிரதமர் அனைத்து மக்களுக்கும் ஒரே மாதிரியான நிவாரணத்தை வழங்குவார் என்றும், பலர் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என்றும் டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நம்புகிறார்.

"நாடு முழுவதும் சிலாங்கூர் வாக்காளர்கள் அதிகம் உள்ளனர், அதாவது 36.7 லட்சம்." இங்கு பணிபுரியும் மற்றும் வசிக்கும் ஏராளமான மற்ற மாநில மலேசியர்களும் உள்ளனர். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்கிறார்கள், என்று அவர் இன்று ஒரு சிறப்பு செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.


அரசு மற்றும் தனியார் துறைகளுக்கு விடுமுறை பொருந்தும் என்றும், மாநில அரசின் முடிவை அறிவிப்பதற்காக வரும் புதன்கிழமை அரசிதழ் வெளியிடப்படும் என்றும் அவர் விளக்கினார். தேர்தல் ஆணையம் 15வது பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளாக நவம்பர் 19ஆம் தேதியை நிர்ணயித்துள்ளது. அதே சமயம் முதற்கட்ட வாக்குப்பதிவு நவம்பர் 15ஆம் தேதி நடைபெறும். பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாகோப், நவம்பர் 18 அன்று வெளியிடப்பட்ட அதே வெளியீட்டை வாக்காளர்கள் எளிதாகத் திரும்பி வந்து மறுநாள் வாக்களிப்பதை எளிதாக்குவதற்கு அரசாங்கம் ஆய்வு செய்து வருவதாக தெரிவித்தார்.

# 15வது பொதுத் தேர்தலில் புறநகர் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும்- ஆய்வாளர்கள் கருத்து

கோலாலம்பூர்:-

வரும் 19ஆம் தேதி நடைபெறவிருக்கும் நாட்டின் பதினைந்தாவது பொதுத்தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சமாக புறநகர் மற்றும் உட்புற வாக்காளர்களின் வாக்குகள் அமையும் என்பதால் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரை அந்த வாக்காளர்கள் ‘‘பொன்னாக‘‘ கருதப்படுகிறார்கள்.

நாட்டிலுள்ள 222 நாடாளுமன்றத் தொகுதிகளில் 144, அதாவது பாதிக்கும் மேற்பட்டவை பெல்டா குடியேற்றப் பகுதிகள் உள்ளிட்ட புறநகர்களில் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.இவை யாவும் எந்த அரசியல் கட்சியாலும் ‘‘வெள்ளை‘‘ என வகைப்படுத்த முடியாத தொகுதிகளாக உள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர். நாட்டின் அரசியல் வடிவமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம், துரித நகரமயமாக்கல், கல்வி கற்றோர் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் பரந்த இணைய பயன்பாடு ஆகியவை தேர்தல் களத்தை பதட்டமானதாக்கும் என அவர்கள்



கருத்து தெரிவித்தனர். பதினைந்தாவது பொதுத் தேர்தல் கணிக்க முடியாத அளவுக்கு கடினமானதாக உள்ளது. சபாவிலுள்ள 25 தொகுதிகள், சரவாக்கிலுள்ள 31 தொகுதிகள் இராணுவ முகாம்கள் உள்ள தொகுதிகள் ஆகியவை குறிப்பிட்ட அரசியல் கூட்டணிக்கு இனியும் பாதுகாப்பான வைப்புத் தொகை தொகுதிகளாக இருக்க இயலாது எனவும் கருதப்படுகிறது. பெல்டா குடியேற்றப் பகுதிகளில் தேசிய முன்னணிக்கு ஆதரவு குறைந்து வருவதை கடந்த இரு தேர்தல் முடிவுகள் காட்டுவதாக மாரா தொழில்நுட்ப பல்கலைக்கழக ரவுப் வளாகத்தின் நிர்வாக அறிவியல் மற்றும் கொள்கை கல்விப் புலத்தின் மூத்த விரிவுரையாளர் டாக்டர் சே ஹம்டான் சே முகமது ரசாலி கூறினார்.

பெல்டா பகுதிகளில் கடந்த 13வது பொதுத் தேர்தலின் போது 60.2 ஆக இந்த தேசிய முன்னணி மீதான ஆதரவு கடந்த 14வது பொதுத் தேர்தலில் 6.2 விழுக்காடாக குறைந்தது. பெல்டா தொகுதிகளில் இனியும் எளிதாக வெற்றி பெறலாம் என தேசிய முன்னணி இனியும் கருத முடியாது என அவர் சொன்னார்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தங்களின் தீவிர ஆதரவாளர்கள் தவிர்த்து இளம் வாக்காளர்கள் குறிப்பாக முதன் முறையாக வாக்களிப்போரை அரசியல் கட்சிகள் பெரிதும் நம்பியுள்ளன என்று அவர் கூறினார்.இதே கருத்தை பகிர்ந்து கொண்ட வட மலேசிய பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் டாக்டர் முகமது அசுஸிடின் முகமது சானி, துரித மேம்பாடும் கல்வி வாய்ப்பும் புறநகர் சமூகத்தின் வாக்களிக்கும் பாணியை மாற்றியுள்ளது என்றார்.வரும் பதினைந்தாவது பொதுத் தேர்தலில் எந்த தொகுதியும் தங்களுக்கு பாதுகாப்பானது என எந்த கட்சியாலும் கூற இயலாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மலாய் வாக்காளர்களின் மதிநுட்பத்தை ஏளனம் செய்யாதீர்

# பாஸ் கட்சிக்கு ஜசெக அறிவுறுத்து

ஷா ஆலம்:-

தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் மலாய் வாக்காளர்களுக்கு உள்ள புத்திசாலித்தனத்தை குறைத்து மதிப்பிடுவதை நிறுத்துமாறு பாஸ் கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அப்துல் ஹாடி அவாங்கிற்கு ஜனநாயக செயல் கட்சியின் (ஜசெக) மலாய் வேட்பாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இனி மக்கள் இனம் மற்றும் மதத்தின் அடிப்படையில் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை ஹாடி அவாங் உணர வேண்டும் என்று ஸுல்ஹாஸ்மி ஷாரிப் (ஜெராய்), கைரில் காலிட் (பூலாவ் மானிஸ்), ஷெர்லினா அப்துல் ரஷிட் (புக்கிட் பெண்டேரா), தர்மிஷி முகமது ஜாம் (கரீக்), யோங் ஷியேபுரா ஒத்மான் (பெந்தோங்), ஷியேரெட்ஸான் ஜோஹான் (பாங்கி), ஷேக் ஓமார் (ஆயர் ஹீத்தாம்) ஃபாத்தின் ஜுலைகா ஜைதி (மெர்சிங்), ஷா ஷாஸ்வான் ஸ்டைனல் (பொந்தியான்) மற்றும் பட்ருல் ஹிஷாம்




படாருடின் (சங்காட் ஜோங்) ஆகிய வேட்பாளர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் கூறினர்.மலாய் வாக்காளர்கள் ஜசெகவின் மலாய் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது அவர்கள் முஸ்லீம்கள் என்ற காரணத்திற்காக அல்ல. மாறாக கட்சி பிரதிநிதிகளின் செயல்திறன் மற்றும் சேவைகளின் அடிப்படையில் வாக்களிக்கின்றனர் என்று அந்த வேட்பாளர்கள் தெரிவித்தனர்.மலாய் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் எளிதாக வெல்லும் இடங்கள் அல்ல. இருப்பினும், 15வது பொதுத் தேர்தலில் பக்காத்தான் ஹராப்பான் வெற்றிபெற உதவுவதற்காக தங்களின் சிறந்த வேட்பாளர்களை ஜசெக களமிறக்கியுள்ளது. இதன் மூலம் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் பிரதமராக வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று அவர்கள் குறிப்பிட்டனர் .

இருந்த போதிலும் ஜசெகவுக்கு விளம்பரம் அளித்ததற்காகவும் இந்த தேர்தலில் பல மலாய் வேட்பாளர்களை அக்கட்சி அறிமுகப்படுத்தியதை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தியதற்காகவும் நாங்கள் ஹாடி அவாங்கிற்கு நன்றி கூறுகிறோம்.

உயர்தர மலாய் வேட்பாளர்களை அறிமுகப்படுத்துவதில் ஜசெகவின் முயற்சிகள் பாஸ் மற்றும் பெரிக்கத்தான் நேஷனல் கட்சிகளை திகைக்க வைத்துள்ளது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம் அவ்வறிக்கையில் ஜசெக மலாய் வேட்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 211 பேர் கிள்ளானில் உள்ள மூன்று தற்காலிக தங்கும் இடத்தில் உள்ளனர்

கிள்ளான்:-

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 49 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 211 பேர் கிள்ளான் மற்றும் பெட்டாலிங் மாவட்டங்களில் உள்ள மூன்று தற்காலிக தங்குமிடங்கள் (பிபிஎஸ்) உள்ளனர்.32 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 147 தனிநபர்கள் இருந்த தேசியப் பள்ளி (எஸ்கே) கம்போங் ஜோஹான் செத்தியாவில்தான் அதிக எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று டத்தோ மந்த்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 32 வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கிள்ளானில் உள்ள எஸ்.கே. சுங்கை பிஞ்சாய் மேருவில் உள்ளனர், அதே நேரத்தில் கம்போங் புடிமான் மக்கள் மண்டபத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 32 பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

“கம்போங் புடிமானில் மூன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கோவிட் -19 க்கு நேர்மறை சோதனை செய்ததைக் கண்டறிந்தோம், இப்போது அவர்கள் ஒரு மண்டபத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்,” என்று அவர் கூறினார்.

## கம்போங் ஜோஹான் செத்தியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை மாட் சாபு நேரில் சென்று கண்டார்

ஷா ஆலம்:-

பக்காத்தான் ஹராப்பான் கோத்தா ராஜா நாடாளுமன்றத்தின் வேட்பாளர் கம்போங் ஜோஹான் செத்தியா தேசிய பள்ளியில் தற்காலிக தங்குமிடத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட நேரத்தை செலவிட்டார்.பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற அயராது உழைத்த மீட்பு நிறுவனங்களுக்கு மாட் சாபு பேஸ்புக் மூலம் நன்றி தெரிவித்தார்.“பொதுத் தேர்தலில் யார் தேர்ந்தெடுக்கப் பட்டாலும் கிள்ளான் பள்ளத்தாக்கு மற்றும் பிற மாநிலங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள பிரச்சினையில் சிறப்பு கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்,” என்றார்.

ஜாலான் கெபுனில் உள்ள வீட்டில் நோய்வாய்ப்பட்ட குடியிருப்பாளர்களைப் பார்வையிடவும் அமனா கட்சியின் தலைவர் மறக்கவில்லை.முகமது சாபு அல்லது அன்பாக மாட் சாபு என்று அழைக்கப்படும் அவரின் செயல் மக்களின் ஆரோக்கிய மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் என்பதற்கான அறிகுறியாகும்.“கம்போங் ஜாலான் கெபுன் மற்றும் ஹாஜி கைரியின் தலைவர் வாக் சக்முன் டோக் ஹாஷிமின் ஆரோக்கியத்திற்காக கம்போங் ஜாலான் கெபுனில் உள்ள ஆர்வலர்கள் மற்றும் முதியவர்கள் மத்தியில் பிரார்த்தனை செய்யுங்கள்,” என்று அவர் கூறினார்.



# தலைமுறை காக்க அணி திரண்டு வாரீர்

## கிள்ளான் நாடாளுமன்ற வேட்பாளர் கணபதி ராவ் அழைப்பு.

கிள்ளான்:-

எதிர்வரும் 19 தேதி நடைபெறும் 15 வது பொதுத் தேர்தலில் வாக்களிக்க இந்திய சமுதாயம் அலையென திரண்டு வந்து வாக்களித்து அடுத்த தலைமுறை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழ வழி வகுப்பீர் என்று இந்திய சமுதாயத்திக்கு அழைப்பு விடுத்தார்.

கிள்ளான் நாடாளுமன்றத்தின் நம்பிக்கை கூட்டணியில் வேட்பாளர் கணபதி ராவ். கடந்த காலத்தில் இந்திய சமுதாயம் இழந்த உரிமைகளை நாம் மீட்டெடுக்க வேண்டும். இந்த தேர்தலில் நம்பிக்கை கூட்டணியின் சார்பில் போட்டியிடும் எல்லா வேட்பாளர்களுக்கும் பிளவு படாத ஆதரவை இந்திய சமுதாயல் கொடுக்க வேண்டும் என்று சிலாங்கூர் மாநில அரசு ஆட்சிக்குழு உறுப்பினருமான கணபதி ராவ் கேட்டுக் கொண்டார்.

மலாக்கா மற்றும் ஜோகூர் மாநிலத் தேர்தல்களில் இந்தியர்கள் திரண்டு வரவில்லை. இந்தியர்கள் கணிசமான அளவில் வாக்களிக்க வராததால் வெற்றியை பறி கொடுத்தோம். 15 வது பொதுத் தேர்தலில் அனைவரும் அலை



கடலென திரண்டு வந்து 2008 ஆம் ஆண்டு ஹின்றாப் கொண்டு வந்த பேரலையை மீண்டும் கொண்டு வர வேண்டும். இந்த தேர்தலிலும் அந்த மகத்தான சாதனை நாம் மீண்டும் படைக்க வேண்டும் என்று ஹின்றாப் முன்னணித் தலைவர்களில் ஒருவராக திகழ்ந்த வழக்கறிஞர் கணபதி ராவ் கேட்டுக் கொண்டார். ஆளும் தேசிய முன்னணி 22 மாத நம்பிக்கை கூட்டணி ஆட்சியை மிகை படுத்தி பேசி திசை திருப்பி வருகின்றனர். குறிப்பாக ம.இ.கா.வினர் இதனை செய்து வருகின்றனர். மக்கள் நமக்கு 5 ஆண்டுகளுக்கு ஆட்சி உரிமையை வழங்கினார்கள். ஆனால் சில துரோகிகளோடு இணைந்து கொள்ளைப் புறமாக ஆட்சியை தட்டி பறித்த கொள்ளைக்கார கும்பல் இன்று புலம்பிக் கொண்டிருக்கிறது.கடந்த 3 தவணைகளாக சிலாங்கூர் மாநில அரசை வெற்றிகரமாக நம்பிக்கை கூட்டணி வழி நடத்தி வருகிறது. இந்திய சமுதாயத்திக்கு பல சிறந்த சேவைகளை நாம் செய்து வருகிறோம்.

மத்திய அரசாங்கத்தை நம்பிக்கை கூட்டணி இந்த தேர்தலில் கைப்பற்றினால் நாடாளவில் மகத்தான சேவையை இந்திய சமுதாயத்திக்கு வழங்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த தேர்தலில் நம்பிக்கை கூட்டணியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக தெரிகிறது. 2018 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஏற்படுத்திய ஆட்சி மாற்றத்தை இந்த தேர்தலிலும் நாம் கொண்டு வர முடியும்.

மலாய்க்காரர்களும் சீனர்களும் எனக்கு கிள்ளான் தொகுதியில் மாபெரும் ஆதரவை வழங்கி வருகின்றனர். செல்லும் இடம் எல்லாம் மக்கள் ஆதரவு பெருகி வருகிறது.

சிலாங்கூரில் உள்ளஅனைத்து நம்பிக்கை கூட்டணியின் வேட்பாளர்களுக்கும் இந்திய சமுதாயம் பிளவு படாத ஆதரவை வழங்கி அனைவரையும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கிள்ளான் தொகுதியில் களம் இறங்கி தீவிர பிரச்சாரத்தில் ஈடு பட்டிருக்கும் கணபதி ராவ் கேட்டுக் கொண்டார்.

# கிள்ளான் தொகுதியில் 7 முனை போட்டி

## நிலவினாலும் வெற்றியை நோக்கி கணபதி ராவ் பீடு நடை

கிள்ளான்:-

கிள்ளான் நாடாளுமன்ற தொகுதியில் இம்முறை 7 முனை போட்டி நிலவுகிறது. 7 முனை போட்டியாக இருந்தாலும் நம்பிக்கை கூட்டணிக்கும் தேசிய முன்னணிக்கும் இடையில் தான் பலத்த போட்டி நிலவுகிறது. எது எப்படி இருப்பினும் வெற்றியை நோக்கி கணபதி ராவ் பீடு நடை போடுகிறார் என்றால் அது மிகையாகாது. இத்தொகுதியில் பக்காத்தான் ஹராப்பான், தேசிய முன்னணி, பக்காத்தான் நேஷனல் வாரிசான், பி.ஆர்.எம் மற்றும் 2 சுயேட்சைகளும் போட்டியிடுகின்றனர். கிள்ளான் நாடாளுமன்ற தொகுதிக்குள் கிள்ளான் துறை முகம், பண்டமாரன், பண்டார் கிள்ளான் ஆகிய மூன்று சட்ட மன்றங்கள் உள்ளன. இத்தொகுதிகள் அனைத்தும் நம்பிக்கை கூட்டணி கைவசம் உள்ளன. மேலும் கிள்ளான் தொகுதியில் கடந்த 3 தவணையாக ஜ.செ.க.வின் கோட்டையாக உள்ளது. சார்ல்ஸ் சந்தியாகோ



3 தவணையாக இத்தொகுதியை நமது கோட்டையாக வைத்திருந்தார்.

கிள்ளான் தொகுதியில் மொத்தம் 207,000 வாக்காளர்கள் உள்ளனர். மேலும் இதில் 70,000 புதிய வாக்காளர்களும் அடங்குவர். இம்முறை மக்கள் நம்பிக்கை கூட்டணிக்கு பெரும் ஆதரவை வழங்கி வருகின்றனர். நாடு தழுவிய அளவில் நம்பிக்கை கூட்டணிக்கு ஆதரவு பெருகி வருகிறது. இளம் புதிய வாக்காளர்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். புதிய வாக்காளர்களின் ஆதரவுடம் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் இத்தொகுதியில் வெற்றி பெறுவேன் என மிகுந்த நம்பிக்கையோடு கிள்ளான் வேட்பாளர் கணபதி ராவ் தெரிவித்தார்.

# ஹராப்பான் வேட்பாளர் சிப்பாங்கை

## ஒரு விருப்பமான சுற்றுலா மையமாக மாற்ற விரும்புகிறார்



சிப்பாங்:-

பக்காத்தான் ஹராப்பான் 15வது பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றால், சிப்பாங் ஒரு சிறந்த சுற்றுலா மையமாக மேம்படுத்த பாடுபடுவார்.நகர்ப்புறம், புறநகர் மற்றும் கிராமங்களை உள்ளடக்கிய மாவட்டத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பதில் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் அய்மான் அதிரா சாபு, ஆர்வம் கொண்டுள்ளார்.

கடலோர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, சிப்பாங் ஒரு சுற்றுலாத் தலமாக வலுப்படுத்த முடியும்.சிப்பாங் மாவட்டத்தில் மீனவர்களும் உள்ளனர், எனவே முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் அதிகம் மற்றும் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும் என்று நேற்று பாகான் லாலாங் மேடான் செலேரா குழு பயண அமர்வின் போது அவர் கூறினார்.வர்த்தகர்களும் பார்வையாளர்களும் இப்பகுதியில் அதிக செயல்பாடுகளை விரும்புகிறார்கள், இது நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயங்களில் ஒன்றாகும் என்று அய்மான் அதிரா கூறினார்.

பாகான் லாலாங்கில் வார இறுதி நாட்களில் மக்கள் சுற்றுலா மேற்கொள்வதால் கூட்ட

நெரிசல் இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது, அதை மேம்படுத்த சாலை போக்குவரத்து போன்ற இதர சுற்றுலா வசதிகள் மீது ஆய்வு நடத்தப்பட வேண்டும், என்று அவர் கூறினார்.

# ஷா ஆலம் நகரில் கூடுதல் மருத்துவ வசதிகள்

## ஹராப்பான் வேட்பாளர் வாக்குறுதி

ஷா ஆலம்:-

பொதுத் தேர்தலில் தாம் வெற்றி பெற்றால் ஷா ஆலம் நகரில் மருத்துவ வசதிகளை அதிகரிக்கவுள்ளதாக ஷா ஆலம் தொகுதிக்கான பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளர் அஸ்லி யூசுப் கூறினார்.மக்கள் தொகை அதிகம் உள்ள காரணத்தால் இந்நகரில் கூடுதல் மருத்துவ வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை தாம் பெற்று வருவதாக அவர் சொன்னார்.இந்நகரிலுள்ள செக்சன் 7 மற்றும் செக்சன் 19 ஆகிய இடங்களில் மட்டும் சுகாதார கிளினிக்குகள் உள்ளன. இதனை அதிகரிப்பதற்கான கோரிக்கையை நான் முன்வைப்பேன் என்று இங்கு நடைபெற்ற வேட்பு மனுத் தாக்கல் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.மாநகரின் அந்தஸ்துக்கேற்ப ஷா ஆலம் வளர்ச்சியில் யாரும் பின்தங்கிவிடாமலிருப்பதை உறுதி செய்ய தாம் விரும்புவதாகவும் அவர் சொன்னார்.குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் தரப்பினர் எதிர்நோக்கும் வாழ்க்கைச் செலவினப் பிரச்னை உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தாம் குரல் கொடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்தொகுதியில் தேசிய முன்னணி வேட்பாளர் இஷாம் ஜாலில், பெரிக்கத்தான் நேஷனல் வேட்பாளர் அலிப் பஹாருடின் மற்றும் பெஜுவாங் வேட்பாளர் ராபிக் ரஷிட் ஆகியோரை அஸ்லி எதிர்கொள்கிறார்.



**சிலாங்கூர் மாநிலத்தை ஆளும் பக்கத்தான் ஹராப்பான் அரசு இந்திய சமூகத்தின் மேம்பாடு மீது எப்போதும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. கடந்த 2008 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் அமல்படுத்தப் பட்ட திட்டங்கள் வாயிலாக பல்வேறு அனுகூலங்களை பெறுவதற்குரிய வாய்ப்பினை இந்திய சமூகம் பெற்றுள்ளது. கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூகவியல் துறைகளில் இந்திய சமூகத்திற்காக மாநில அரசு அமல்படுத்தியுள்ள பிரத்தியேகத் திட்டங்களைக் காண்போம்-**

# இந்திய சமூகத்தின் வளர்ச்சிக்கு சிலாங்கூர் பக்கத்தான் ஹராப்பான் அரசின் பிரத்தியேகத் திட்டங்கள்



### தமிழ்ப்பள்ளிகளுக்கு வெ.50 லட்சம் மானியம்

தமிழ்ப்பள்ளி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் மாநில அரசு தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது. இதன் அடிப்படையில் மாநிலத்திலுள்ள 98 தமிழ்ப்பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் 50 லட்சம் வெள்ளி மானியமாக வழங்கப்படுகிறது. தொடக்கத்தில் 40 லட்சம் வெள்ளியாக இருந்த இந்த வருடாந்திர மானியம் கடந்த 2015ஆம் ஆண்டில் 50 லட்சம் வெள்ளியாக உயர்த்தப்பட்டது.

### ஆலயங்களுக்கு வெ.18 லட்சம் நிதி ஒதுக்கீடு

சிலாங்கூரிலுள்ள இந்து ஆலயங்களின் மேம்பாட்டிற்கு மாநில அரசு வருடாந்திர மானியமாக 18 லட்சம் வெள்ளியை வழங்கி வருகிறது. மாநிலத்திலுள்ள ஆலயங்களில் சமய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பராமரிப்பு பணிகளுக்கும் இந்த நிதி வழங்கப்படுகிறது. மாநிலத்திலுள்ள இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மாநில அரசு ஒரு கோடி வெள்ளியாக உயர்த்தவுள்ளது. தற்போது வழங்கப்படும் 70 லட்சம் வெள்ளியுடன் மேலும் 30 லட்சம் வெள்ளியை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அறிவித்துள்ளார்.

### தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கு பேருந்து கட்டணம்

பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதில் சிரமத்தை எதிர்நோக்கும் வசதி குறைந்த பி40 குடும்பங்களுக்கு உதவும் நோக்கி மாநில அரசு பள்ளி பேருந்து கட்டணத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்காக கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வரும் இந்த பிரத்தியேகத் திட்டத்தின் வழி ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வாண்டில் இத்திட்டத்திற்காக மாநில அரசு பத்து லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் 3,269 மாணவர்கள் மாதம் தலா 300 வெள்ளியைப் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.இந்த திட்டத்தினால் ஒதுக்குப்புறம், மற்றும் தொலைதூரத்தில் உள்ள பள்ளிகளுக்கு சென்று கல்வி கற்க மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அருகிலுள்ள பிற மொழிப் பள்ளிகளுக்கு சென்று நம் தமிழ்ப்பள்ளிகளின் மூடுதலும் தவிர்க உதவுகிறது மாநில அரசின் இத்திட்டம்.

### இந்திய சமூகத் தலைவர்கள் நியமனம்

மாநில அரசுக்கு பொதுமக்களுக்கும் இடையே உறவுப் பாலமாக செயல்படும் நோக்கில் சிலாங்கூர் மாநில ஹராப்பான் அரசு இந்திய சமூகத் தலைவர் பதவியை உருவாக்கியுள்ளது. பக்கத்தான் ஆட்சிக் காலத்தில்தான் இத்தகைய இந்திய சமூக தலைவர் பதவி முதன் முறையாக உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்கத்தில் 48 பேராக இருந்த இந்த சமூக தலைவர்களின் எண்ணிக்கை தற்போது 62ஆக உயர்வு கண்டுள்ளது. இந்த சமூக தலைவர்களுக்கு மாதாந்திர அலவன்சும் சமூக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மானியமும் வழங்கப்படுகிறது. இந்தியர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நிலவும் பிரச்னைகளை அடையாளம் கண்டு அவற்றை அரசின் கவனத்திற்கு கொண்டுச் சென்று தீர்வு காணும் பணியினை இந்த சமூகத் தலைவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். நோன்புப் பெருநாளின் போது இந்த சமூகத் தலைவர்களுக்கு தலா 1,000 வெள்ளி வெகுமதியாக வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.




### உயர்கல்வி பயிலும் இந்திய மாணவர்களுக்கு கல்விக் கட்டணம்

டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வசதி குறைந்த பி40 குடும்பங்களை சேர்ந்த 150 இந்திய மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை சிலாங்கூர் அரசு ஏற்றுக் கொள்கிறது. இத்திட்டத்தின் வழி டிப்ளோமா பயிலும் மாணவர்களுக்கு 3,000 வெள்ளியும் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு 5,000 வெள்ளியும் வழங்கப்படுகிறது. மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவாக குடும்ப வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

### 12 ஊராட்சி மன்றங்களில் 56 இந்திய பிரதிநிதிகள் நியமனம்

சிலாங்கூரில் மாநகர் மன்றம், நகராண்மைக் கழகம் மற்றும் மாவட்ட மன்றத்தை உள்ளடக்கிய 12 ஊராட்சி மன்றங்களில் 56 இந்திய பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர். மொத்தம் உள்ள 281 ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் இது 20 விழுக்காட்டை பிரதிபலிக்கிறது. கிள்ளான் நகராண்மைக் கழகத்தில் அதிகப்பட்சமாக ஏழு இந்திய உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். பாரிசான் ஆட்சிகாலத்துடன் ஒப்பிடுகையில் இது மிக அதிகமான எண்ணிக்கையாகும்.

### குடியுரிமைப் பிரச்னைகளுக்கு மைசெல் வழி தீர்வு

சிலாங்கூரில் பிறப்பு பத்திரம், அடையாளக் கார்டு உள்ளிட்ட ஆவணங்களை பெறுவதில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக மாநில அரசு மைசெல் எனும் சிறப்பு பிரிவை உருவாக்கியுள்ளது. வீ.கணபதிராவ் தலைமையிலான பரிவுமிக்க அரசுத் துறைக்கான ஆட்சிக்குழுவின் கீழ் செயல்படும் இந்த பிரிவு குடியுரிமை, குழந்தை தத்தெடுப்பு, பிறப்பு பத்திரம் மற்றும் சிவப்பு அடையாளக் கார்டு ஆகிய நான்கு பிரச்னைகளுக்கு தீர்வை ஏற்படுத்தும் முயற்சியல் ஈடுபட்டு வருகிறது. கடந்தாண்டு மார்ச் மாதம் வரை குடியுரிமை தொடர்பான மொத்தம் 445 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த திட்டம் அனைத்து இனங்களுக்கும் பொதுவானதாக இருந்த போதிலும் இதன் வழி இந்திய சமூகம் கணிசமான அளவு பயன்பெற்றுள்ளது.

### இந்தியர் விவகாரங்களுக்கான மந்திரி புசாரின் சிறப்பு அதிகாரி நியமனம்

மந்திரி புசாரின் இந்திய சமூகத்திற்கான சிறப்பு அதிகாரி பதவியை மாநில அரசு உருவாக்கியுள்ளது. கடந்தாண்டு உருவாக்கப்பட்ட இப்பதவிக்கு செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய சமூகம் எதிர்நோக்கும் பிரச்னைகளை நேரடியாக மந்திரி புசாரின் கவனத்திற்கு கொண்டுச் சென்று தீர்வு காண்பதற்குரிய வாய்ப்பினை இந்த பதவி ஏற்படுத்தியுள்ளது.

### கோவிட்-19 காலத்தில் 15,000 இந்திய குடும்பங்களுக்கு உணவுப் கூடைகள் விநியோகம்

கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காலத்தில் வசதி குறைந்த சுமார் 15,000 இந்திய குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. பெருந்தொற்று பரவலின் போது அமல்படுத்தப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக இத்தரப்பினர் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்காமலிருப்பதை உறுதி செய்ய இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கோவிட்-19 சமயத்தில் ஆலயங்களில் வழிபாடுகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படாததால் அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு இந்த உணவுப் பொருள் விநியோகத் திட்டம் அமல்படுத்தப்பட்டது.

### இந்திய தொழில் ஆர்வலர் மையம் (சித்தம்)

வர்த்தகம் மற்றும் தொழில் துறையில் ஈடுபாடு காட்டி வரும் இந்திய தொழில் முனைவோருக்கு குறுகிய கால திறன் மற்றும மேம்பாடு பயிற்சிகள், வர்த்தக வழிகாட்டி, கடனுதவி மற்றும் வர்த்தக உபகரணங்களை வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்திய தொழில் ஆர்வலர் மையம் (சித்தம்) கடந்த 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்புக்கு யாயாசான் ஹிஜ்ரா அறவாரியத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 10 லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த சித்தம் திட்டம் மூலம் இதுவரை 2,000க்கும் மேற்பட்ட சிறு வணிகர்கள் பயன் பெற்றுள்ளனர்.

### சீபீல்டு ஆலயத்திற்கு நிலம்-செட்டி பாடாங் பெயர் நிலை நிறுத்தம்

நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய சுபாங் ஜெயா, சீபீல்டு தோட்ட ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயப் பிரச்னைக்கு மாநில அரசு நிரந்தரத் தீர்வைக் கண்டுள்ளது. அந்த ஆலயத்தை அதே இடத்தில் நிலைநிறுத்துவதற்கு அனுமதி வழங்கியதன் வழி அந்த ஆலயம் எதிர்நோக்கி வந்த சுமார் 20 ஆண்டுகாலப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. இது தவிர, மாநிலத்திலுள்ள பல ஆலயங்கள் எதிர்நோக்கி வந்த நிலப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டு நிலப்பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. அதே சமயம், கிள்ளான் லிட்டில் இந்தியா





பகுதியில் உள்ள செட்டி பாடாங் பெயரை மாற்றும் முயற்சியையும் மாநில அரசு தடுத்தி நிறுத்தி விட்டது. செட்டி பாடாங் என அழைக்கப்பட்ட இந்த இடத்தை மேம்படுத்தி டத்தாரான் எம்.பி.கே. என கிள்ளான் நகராண்மைக் கழகம் பெயரிட்டது. எனினும் பொது மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக அந்த இடத்திற்கும் டத்தாரான் எம்.பி.கே. பாடாங் செட்டி என நிலை நிறுத்தியுள்ளது.

## 2022 பட்ஜெட்டில் இந்திய சமூ கத்திற்கு வெ. 1.2 கோடி ஒதுக்கீடு

கடந்தாண்டு நவம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்திய சமூ கத்தின் மேம்பாட்டிற்கு 1 கோடியே 20 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டது. அதில் தமிழுப்பள்ளிகளுக்கு 50 லட்சம் வெள்ளியும் ஆலயங்களுக்கு 18 லட்சம் வெள்ளியும் பகிர்ந்த்தளிக்கப்பட்டது. இது தவிர இந்திய கலை, கலாசார நிகழ்வுகள், சிறு பயிற்சித் திட்டங்களுக்கு 5 லட்சம் வெள்ளியும் யு.பி.எஸ். ஆர். மாணவர்களுக்கு வெகுமதி, பள்ளி பேருந்து கட்டணம், உயர்கல்விக் கூட மாணவர்களுக்கு நிதியுதவி உள்ளிட்ட மாணவர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 20 லட்சம் வெள்ளியும் ஒதுக்கப்பட்டது. மேலும், ஐ-சீட் எனப்படும் இந்திய சமூக மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு இலாகாவுக்கு 11 லட்சத்து 46 ஆயிரம் வெள்ளியும் தீபாவளி ஷோம் ஷோப்பிங் திட்டத்திற்கு 20 லட்சம் வெள்ளியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## ஐ-சீட் வர்த்தக உபகரண உதவித் திட்டம்

குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் தங்கள் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதற்கு உதவும் நோக்கில் இந்திய சமூக மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு இலாகா (ஐ-சீட்) கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தகுதி உள்ள வர்த்தகர்கள் 10,000 வெள்ளி வரையிலான மதிப்புள்ள வர்த்தக உபகரணங்களைப் பெற முடியும். இத்திட்டத்தின் வழி இதுவரை 600 வணிகர்கள் பயன்டைந்துள்ளனர். இத்திட்டத்திற்கு வருடாந்திர மானியமாக மாநில அரசு 10 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

## தீபாவளி வர்த்தகத்திற்கு பிரத்தியேக கடனுதவித் திட்டம்

தீபாவளி பண்டிகையின் போது வர்த்தகத்தில் ஈடுபடும் வணிகர்களுக்கு உதவும் வகையில் மாநில அரசு யாயாசான் ஹிஜ்ரா அறவாரியத்தின் வாயிலாக சிறப்புக் கடனுதவித் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. ஐ-பெர்மூஸிம் எனப்படும் விழாக்கால கடனுதவித் திட்டத்தின் கீழ் 1,000 வெள்ளி முதல் 20,000 வெள்ளி வரை கடனுதவி வழங்கப்படுகிறது. தீபாவளிக்கு தேவையான பொருள்களை வீட்டிலிருந்து வியாபாரம் செய்வோரும் சந்தைகளில் கடை அமைத்து வர்த்தகம் புரிவோரும் இந்த கடனுதவி திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

## தீபாவளி ஷோம் ஷோப்பிங் திட்டம்

வசதி குறைந்த பி40 தரப்பினர் பெருநாளை கொண்டாடுவதில் எதிர்நோக்கும் சிரமத்தை குறைப்பதற்காக மாநில அரசு 80 லட்சம் வெள்ளி ஒதுக்கீட்டில் ஜோம் ஷோப்பிங் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தீபாவளியைக் கொண்டாடும் வசதி குறைந்த இந்துக்களுக்கு 20 லட்சம் வெள்ளி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுதி உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட தொகுதிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பேரங்காடிகளில் தங்களுக்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொள்ள தலா 100 வெள்ளிக்கான பற்றுச் சீட்டுகள் வழங்கப்படும்.



## சாதனை புரிந்த விளையாட்டாளர்களுக்கு வெகுமதி

விளையாட்டுத் துறையில் அனைத்துலக நிலையில் மலேசியாவுக்கு பெருமை சேர்த்து வரும் விளையாட்டாளர்களை இன, அரசியல் வேறுபாடின்றி பாராட்டி வெகுமதி வழங்குவதில் சிலாங்கூர் தனித்துவமிக்க மாநிலமாக விளங்கி வருகிறது. அந்த வகையில் 2022 பர்மிங்ஹாம் காமன்வெல்த் போட்டியில் இரு தங்கப் பதக்கங்களை வென்ற நாட்டின் பூப்பந்து விளையாட்டாளர்

எம். தினாவுக்கு மாநில அரசு 23,000 வெள்ளியை வெகுமதியாக வழங்கியது. இதுதவிர, பனிச்சறுக்கு விளையாட்டில் சிறந்து விளங்கும் பத்து வயதே நிரம்பிய செல்வி ஸ்ரீ அமிராமிக்கு பயற்சிக்கான செலவுத் தொகையாக மாநில அரசு 30,000 வெள்ளியை வழங்கியுள்ளது. 2028 இளையோர் குளிர்கால ஒலிம்பிக் போட்டி மற்றும் 2030 குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கு தயாராவதற்கு ஏதுவாக தென் கொரியாவில் பயிற்சி மேற்கொள்வதற்கு மாநில அரசின் மந்திரி புசார் கட்டமைப்பு (எம்.பி.ஐ.) இந்த தொகையை ஸ்ரீ அபிராமிக்கு வழங்கியது.

## மிட்லெண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி

சிலாங்கூர் மாநில அரசு தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சி மீது காட்டி வரும் அக்கறை மற்றும் ஈடுபாட்டிற்கு எடுத்துக் காட்டாக ஷா ஆலம், மிட்லெண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி விளங்கி வருகிறது. மாநில அரசின் முழு ஒத்துழைப்புடன் சுமார் 40 லட்சம் வெள்ளி செலவில் கட்டப்பட்ட இப்பள்ளி யாராலும் முறியடிக்கப்படாத மாநில அரசின் சாதனையாக இன்றளவும் திகழ்ந்து வருகிறது. ஒரு பள்ளிக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளோடு சுமார் 1,000 பேர் அமரக்கூடிய மாநாட்டு மையத்தையும் இந்த பள்ளி கொண்டுள்ளது.

## மிட்லண்ட்ஸ் தங்கும் விடுதி

வசதி குறைந்த மற்றும் புறநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்கி படிப்பதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கில் பக்கத்தான் அரசு மிட்லெண்ட்ஸ் தமிழ்ப்பள்ளியில் மாணவர் தங்கும் விடுதியைக் கட்டியது.

எனினும், இடையில் மாற்றம் காரணமாக அந்த மாணவர் விடுதி செயல்பட இயலாத நிலை ஏற்பட்டது. மத்திய அரசினால் புறக்கணிக்கப்பட்ட இந்த மாணவர் விடுதிக்கு ஆதரவுக் கரம் நீட்ட மாநில அரசு முன்வந்துள்ளது. இந்த விடுதி செயல்படுவதற்கு ஏதுவாக மானியம் வழங்குவதற்கான சாத்தியத்தை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கோடி காட்டியுள்ளார்.

விரைவில் தாக்கல் செய்யப்படவிருக்கும் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிடுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய ஆலோசக மன்றம்

சிலாங்கூரில் வசிக்கும் இந்தியர்கள் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூகவியல் துறைகளில் எதிர்நோக்கும் பிரதச்னைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு மாநிலத்தில் முதன் முறையாக இந்தியர்களுக்கென சிறப்பு ஆலோசனை மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 15 விழுக்காட்டினராக இருக்கும் இந்தியர்களின் பிரச்னைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு தீர்வு காண்பது இந்த அலோசனை மன்றத்தின் தலையாய நோக்கமாகும். இந்த ஆலோசனைக் குழுவில் அரசியல் தலைவர்கள், தொழில் நிபுணர்கள், சமூக இயக்கவாதிகள் உள்ளிட்ட ஒன்பது பேர் இடம் பெற்றுள்ளனர்.

## பெக்காவானிஸ் தீபாவளி உதவித் திட்டம்

சிலாங்கூர் மாநில மந்திரி புசார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் துணைவியரை பிரதிநிதிக்கும் அமைப்பாக விளங்குவது பெக்காவானிஸ் எனப்படும் சிலாங்கூர் மகளிர் சமூக நல அமைப்பாகும். மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் துணைவியார் டத்தின்ஸ்ரீ மஸ்டியானா முகமது தலைமையில் செயல்படும் இந்த அமைப்பு வசதி குறைந்த குடும்பத்தினர். நோயாளிகள் மற்றும் தனித்து வாழும் தாய்மார்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் தீபாவளியை முன்னிட்டு வசதி குறைந்த மற்றும் தனித்து வாழும் தாய்மார்களுக்கு ரொக்கத் தொகை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கும் பணியை அந்த அமைப்பு மேற்கொண்டு வருகிறது. மாநிலத்திலுள்ள 56 சட்டமன்றத் தொகுதிகள் வாயிலாக அடையாளம் காணப்பட்ட 1,400 பேருக்கு தலா 100 வெள்ளி ரொக்கம் மற்றும் உணவுப் பொருள்களை பெக்காவானிஸ் அமைப்பு இந்த தீபாவளியின் போது வழங்கியது.

## தென்னமரத் தோட்ட நில குடியேற்றவாசிகள் பிரச்னைக்குத் தீர்வு


கோல சிலாங்கூர், பெஸ்தாரி ஜெயா, தென்னமரத் தோட்ட நில குத்தகை தொடர்பில் கடந்த 40 ஆண்டுகளாக 400 குடியேற்றவாசிகள் எதிர்நோக்கி வந்த பிரச்னைக்கு மாநில அரசு தீர்வு கண்டுள்ளது. அங்குள்ள 96.5 ஏக்கர் நிலத்தை மேம்படுத்துவதற்கு இரு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகையை மாநில அரசு ரத்து செய்தது. சம்பந்தப்பட்ட அந்த நிலத்தை சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகம் குடியேற்றவாசிகளுக்கு 21 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கும். அதே வேளையில் அந்நிலத்திற்கு விண்ணப்பம் செய்துள்ள 400 பேரையும் சட்டப்பூர்வ உரிமையாளர்களாக ஆக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது.

## 22) பத்து கேவ்ஸ், இந்தியன் செட்டில்மெண்ட் குடியிருப்பாளர்களுக்கு மாற்று இடம்


சுமார் 40 ஆண்டுகளாக இழுபறியாக இருந்து வந்த பத்து கேவ்ஸ், இந்தியன் செட்டில்மெண்ட் 38 லாட் நில குடியிருப்பாளர்களின் பிரச்னைக்கு மாநில அரசு சுமூ கமான தீர்வை ஏற்படுத்தியுள்ளது. அடிப்படை வசதிகள் இல்லாத குடிசைப் பகுதியாக இந்தியன் செட்டில்மெண்ட் காணப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு கம்போங் சுங்கை துவா, பண்டார் பாரு செலாயாங் மற்றும் கம்போங் பெங்காலியில் அனைத்து வசதிகளுடன் கூடிய மாற்று இடத்தை மாநில அரசு வழங்கியது.



**மாநில அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச காப்பீடு பெற அதிக பங்கேற்பாளர்களை ஈர்க்கவும் , ஒட்டுமொத்த செயல் முறையும் விரைவாகவும் எளிதாகவும் தானியங்கி செயலி உதவுகிறது,**




**எவ்வாறு பதிவு செய்வது**




**இன்சானில் பதிவு செய்வதற்கான வழிமுறைகள் கீழ்வருமாறு, இணைக்கப்பட்ட பட விளக்கத்தை காணவும்.**

1, ஆப் ஸ்டோர் அல்லது கூகுள் பிளே மூலம் வேவ்பே இ-வாலட் செயலியை பதிவிறக்கவும் .
2. இ-வாலட்டில் பதிவு செய்து, உங்கள் அடையாள அட்டை இன் முன் மற்றும் பின் பகுதியை காண்பிப்பது உட்பட உங்கள் தனிப்பட்ட விவரங்களை நிரப்பவும்
3. செயலியில் உள்ள இன்சான் ஐகானைக் கிளிக் செய்யவும்
4. வெற்றிகரமான பதிவுதாரர்களுக்கு காப்பீட்டுத் திட்டத்தின் மின்-சான்றிதழ் வழங்கப்படும்

Customer Service Contacts

Line 1 +60162504199
Line 2 +60164354199
Line 3 +60164474199
Line 4 +60162534199
Line 5 +60162514199

Email: insanbantuan@wavpay.net
For further info, visit www.wavpay.net

www.wavpay.net
Wavpay System
@wavpay

Scan to download the application

முதல் பக்கத் தொடர்ச்சி

# இன்சான் சிலாங்கூர் மக்கள் அனைவருக்கும் இலவச காப்புறுதி



அவர்களின் எதிர்காலத்திற்கு இந்த காப்புறுதி திட்டம் பாதுகாப்பை வழங்கும் என்றார் அவர்.மக்கள் நல்வாழ்வில் நாட்டமிருந்தால், திட்டத்திற்கும், நிதிக்கும் பஞ்சமில்லை. இறப்புகளை, மக்களின் துன்பங்களை கண்டு துடிப்பவர்கள் மனதில் மக்களுக்கான மேம்பாடுகளை மட்டுமே சிந்திக்க முடியும். இது தேர்தல் கால திட்டம் அல்ல, முன்பே அறிவித்து , இது அக்டோபர் மாதம் முதல் தேதி அமல்படுத்தப் படுகிறது. பிறந்து 30 நாள் ஆன குழந்தை முதல் 80 வயது வரையிலானவர்கள் வரை இந்த காப்புறுதி திட்டத்தில் பங்கு பெறலாம் எனக் கூறிய அவர், தேவையின் அடிப்படையில் அவ்வப்போது இந்த திட்டம் தரம் உயர்த்தப்படும் என்றார்.

ஆகவே, நேர்மை, கடும் உழைப்பு மற்றும் உறுதிப்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கும் எங்கள் கொள்கைகள் மூலம் இந்த திட்டத்தை அமல் படுத்தினோம் என்று அவர் மேலும் சொன்னார். இத்தகைய மாற்றங்களைச் செய்வதற்குரிய அரசியல் முனைப்பும் எங்களிடம் இருந்தது என்று கம்போங் லக்ஸமணாவில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநில மக்களுக்கு காப்புறுதி பாதுகாப்பை வழங்கும் இந்த இன்சான் திட்டம் குறித்த அறிவிப்பை மந்திரி புசார் கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் தேதி அறிவித்தார். சுமார் 6,000 கோடி வெள்ளி காப்புறுதி பாதுகாப்பு கொண்ட இத்திட்டத்தின் வாயிலாக 60 லட்சம் சிலாங்கூர் மக்கள் பயன்பெறுவர்.இந்த காப்புறுதித் திட்டத்தின் வழி விபத்தின் காரணமாக ஏற்படும் உயிரிழப்பு அல்லது நிரந்தர முடத்தன்மைக்கு 10,000 வெள்ளி வரை இழப்பீடு பெற முடியும் கோம்பாக் நாடாளுமன்ற உறுப்பினராக தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்த இன்சான் காப்புறுதி திட்டத்தை நாடு முழுமைக்கும் தாம் அறிமுகம் செய்ய நாடாளுமன்றத்தை வற்புறுத்துவேன் என்று அவர் கூறினார்.

| | | | | |
|---|---|---|---|---|
| 69 | தேசிய வகை இராசாக் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 54 | N40 கோத்தா அங்கெரிக் | 50,000.00 |
| 70 | தேசிய வகை காசல்பீல்டு தமிழ்ப்பள்ளி, பூச்சோங் | SJKT 59 | N30 கின்ராரா | 65,000.00 |
| 71 | தேசிய வகை சீப்போர்ட் தமிழ்ப்பள்ளி | SJKT 73 | N32 ஸ்ரீ செத்தியா | 50,000.00 |
| 72 | தேசிய வகை எப்பிங்காம் தமிழ்ப்பள்ளி | SJKT 86 | N36 பண்டார் உத்தாமா | 50,000.00 |
| 73 | தேசிய வகை சரஸ்வதி தமிழ்ப்பள்ளி, சுங்கை பூலோ | SJKT 97 | N37 புக்கிட் லஞ்சான் | 50,000.00 |
| 74 | தேசிய வகை மெதடிஸ்ட் தமிழ்ப்பள்ளி, காப்பார் | SJKT 19 | N42 மேரு | 60,000.00 |
| 75 | தேசிய வகை ஜாலான் அக்கோப் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 41 | N43 செமெந்தா | 50,000.00 |
| 76 | தேசிய வகை பிராப்டன் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 64 | N43 செமெந்தா | 40,000.00 |
| 77 | தேசிய வகை புக்கிட் ராஜா தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 63 | N45 BANDAR BARU KLANG | 40,000.00 |
| 78 | தேசிய வகை ஜாலான் தெப்பி சுங்கை தமிழ்ப்பள்ளி | SJKT 85 | N45 பண்டார் பாரு கிள்ளான் | 50,000.00 |
| 79 | தேசிய வகை ஜாலான் மேரு தமிழ்ப்பள்ளி | SJKT 66 | N45 பண்டார் பாரு கிள்ளான் | 60,000.00 |
| 80 | தேசிய வகை புக்கிட் பெருந்தோங் தமிழ்ப்பள்ளி | SJKT 88 | N07 பாத்தாங் காலி | 60,000.00 |
| 81 | தேசிய வகை பத்தாங்காலி தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 1 | N07 பாத்தாங் காலி | 50,000.00 |
| 82 | தேசிய வகை புக்கிட் டாரா தமிழ்ப்பள்ளி | SJKT 52 | N13 குவாங் | 60,000.00 |
| 83 | தேசிய வகை ரவாங் தமிழ்ப்பள்ளி | SJKT 2 | N14 ரவாங் | 85,000.00 |
| 84 | தேசிய வகை பத்து கேவ்ஸ் தமிழ்ப்பள்ளி | SJKT 42 | N16 சுங்கை துவா | 50,000.00 |
| 85 | தேசிய வகை தாமான் மெலாவாத்தி தமிழ்ப்பள்ளி | SJKT 17 | N18 உலு கிள்ளான் | 65,000.00 |
| 86 | தேசிய வகை செர்டாங் தமிழ்ப்பள்ளி | SJKT 38 | N29 ஸ்ரீ செர்டாங் | 65,000.00 |
| 87 | தேசிய வகை பூச்சோங் தமிழ்ப்பள்ளி | SJKT 21 | N29 ஸ்ரீ செர்டாங் | 65,000.00 |
| 88 | தேசிய வகை கின்ராரா தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 76 | N30 கின்ராரா | 65,000.00 |
| 89 | தேசிய வகை சுங்கை பெர்ணம் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 99 | N01 சுங்கை ஆயர் தாவார் | 40,000.00 |
| 90 | தேசிய வகை சபாக் பெர்ணம் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 87 | N02 சபாக் | 50,000.00 |
| 91 | தேசிய வகை எஸ்கோட் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 51 | N05 உலு பெர்ணம் | 40,000.00 |
| 92 | தேசிய வகை காலும்பாங் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 80 | N05 உலு பெர்ணம் | 50,000.00 |
| 93 | தேசிய வகை சங்காட் ஆசா தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 24 | N05 உலு பெர்ணம் | 50,000.00 |
| 94 | தேசிய வகை லீமா பிளாஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 53 | N05 உலு பெர்ணம் | 15,000.00 |
| 95 | தேசிய வகை கெர்லிங் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 53 | N06 கோல குபு பாரு | 80,000.00 |
| 96 | தேசிய வகை நைகல் கார்டினர் தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 34 | N06 கோல குபு பாரு | 40,000.00 |
| 97 | தேசிய வகை கோல குபு பாரு தமிழ்ப்பள்ளி | SJKT 13 | N06 கோல குபு பாரு | 50,000.00 |
| 98 | தேசிய வகை சுங்கை சோ தோட்டத் தமிழ்ப்பள்ளி | SJKT 6 | N07 பாத்தாங் காலி | 50,000.00 |

**மொத்த தொகை 5,000,000.00**

## மக்கள் சேவையில் சிறந்து விளங்கி மூன்று முறை பத்து தீகா சட்டமன்றத்தை வென்ற

# ரோட்சியா கட்சி ஆணையை ஏற்று அம்பாங்கில் பணியாற்ற வந்துள்ளார்



அம்பாங்:-

மூன்று முறை பத்து தீகா சட்டமன்றத்தில் சிறப்பாக மக்கள் சேவையில் ஈடுபட்டு வரும் ரோட்சியா இஸ்மாயிலை அம்பாங் நாடாளுமன்றத்தில் தனது சேவையை தொடர கட்சி ஊக்குவித்தது.

பக்காத்தான் ஹராப்பான் முன்னால் வேட்பாளர், கெஅடிலான் மக்கள் கட்சியின் உயர்மட்ட தலைமை, பதவியில் இருந்தவர் கட்சியை விட்டு வெளியேறிய பிறகு, இங்கு மக்களுக்கு சேவையாற்ற ஒருவர் தேவை. அவர் திறமையானவர் மக்களுக்கு உழைக்கும் அர்ப்பணிப்பு குணம் கொண்டவராக நம்பிக்கைக்கு உரியவராக இருக்க வேண்டும் என கட்சி எதிர்பார்த்தது.

அதனால் அப்பணியை ஏற்றுக் கொள்ள கட்சி எனக்கு ஆணையிட்டது, "எனக்கு கொடுத்த கடமைகளை செய்யாதவள் அல்ல நான்! இம்முறை அம்பாங் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற கட்சியின் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நான் பத்து தீகா தொகுதியில் வழங்கிய சேவையால் மூன்று முறை தொடர்ந்து தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளேன், நான் நம்பி ஓட்டு போட்ட வாக்காளர்களுக்கோ, கட்சிக்கோ துரோகம் இழைக்கவில்லை. மக்கள் நம்பிக்கையை காற்றில் பறக்க விட வில்லை



என்றார் அவர்.நாடாளுமன்ற உறுப்பினராக தனது பணி எளிதானது அல்ல என்பதை ஒப்புக் கொண்டார், ஆனால் அவர் தன்னால் முடிந்ததை செய்யத் தயாராக இருப்பதாக ரோட்சியா நேற்று இங்கு அருகில் உள்ள அம்பாங் சம்புரானில் வாக்காளர்களை சந்தித்த பின்னர் கூறினார்."பத்து தீகாவில் நான் தோல்வி அடைந்திருந்தால், எனக்கு மூன்று முறை ஒரே இடத்தில் வெற்றி கிடைத்திருக்காது. உண்மையில் தோல்வி கண்டவர்களே கீழ்த்தரமான செயல்களில் துரோகங்களில், கட்சித் தாவல்களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் தான் (தோல்வி கண்டவர்கள்) என்று அவர்களிடம் சொல்ல வேண்டும், நான் அல்ல," என்று அவர் மீண்டும் கூறினார்.

ஒன்பது முனைகள் கொண்ட போட்டியில் பார்ட்டி பங்சா மலேசியா சார்பில் போட்டியிடும் நடப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஜுரைடா கமாருடினை எதிர்த்து ரோட்சியா களம் காண்கிறார்.



## வெள்ள நிவாரண பணிகளுக்கு உதவ இரு படகுகள் சுங்கை பூலோ வேட்பாளர் ரமணன் ஏற்பாடு

ஷா ஆலம்:-

வெள்ளம் ஏற்படும் பட்சத்தில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இரு படகுகளை சுங்கை பூலோ தொகுதி பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளர் டத்தோ ஆர்.ரமணன் ஏற்பாடு செய்துள்ளார்.அதே சமயம் கம்போங் மிலாயு சுபாங்கில் ஏற்படும் வெள்ளத்திற்கான காரணத்தைக் கண்டறிய தனது பொறியியல் துறை அனுபவத்தையும் அவர் பயன்படுத்தவிருக்கிறார். ஏற்பட்ட வெள்ளத்திற்கான காரணம் குறித்து நாங்கள் ஆய்வு நடத்தியுள்ளோம். அந்த வெள்ளப் பிரச்னைக்கான தீர்வு இன்றிரவு அறிவிக்கப்படும். பொறியியலாளர் என்ற முறையில் எனக்குள்ள அனுபவம் வெள்ளத்திற்கான காரணத்தைக் கண்டறிவதை எளிதாக்கியுள்ளது என அவர் குறிப்பிட்டார். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான சில ஏற்பாடுகளை இன்றிரவு நான் அறிவிக்கவிருக்கிறேன். அவை தற்காலிக ஏற்பாடுகள் அல்ல என்பதை மட்டும் என்னால் உறுதியாக கூற முடியும் என்றார் அவர். கம்போங் மிலாயு சுபாங் குடியிருப்பாளர்களைச் சந்தித்தப் பின்னர் சிலாங்கூர்கினியிடம் அவர் இதனைத் தெரிவித்தார். ஷா ஆலம் மற்றும் கிள்ளான் வட்டாரத்திலும் பெய்த கனமழை காரணமாக பலர் தற்காலிக நிவாரண மையங்களில் அடைக்கலம் புகுந்தனர்.

## அம்பாங் தொகுதியில் ரோட்சியாவுக்கு ஆதரவாக கலைஞர்கள் பிரசாரம்

அம்பாங்:-

வரும் பொதுத் தேர்தலில் அம்பாங் தொகுதியை பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி மீண்டும் கைப்பற்றுவதை உறுதி செய்ய பிரபல ராப் பாடகரான அல்டிமேட் மற்றும் நடிகரான ஹான்ஸ் ஐசாக் ஆகியோர் தீவிரப் பிரசாரம் செய்து வருகின்றனர்.தொகுதி மக்கள் குறிப்பாக இளைஞர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவ்விரு பிரபலங்களும் தொகுதியின் பல்வேறு இடங்களில் பிரசாரம் செய்வது கண்டு தாம் மனம் நெகிழ்ந்து போனதாக ஹராப்பான் வேட்பாளரான ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

இந்த தொகுதியில் பிரசித்தி பெற்ற அல்டிமேட், ஹான்ஸ் மற்றும் பலரின் உதவியை அம்பாங் தொகுதியில் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இங்கு நான் மட்டும் பிரசாரம் செய்தால் போதாது. மற்றவர்களும் எனக்கு உதவி புரிவதன் மூலம் அம்பாங் தொகுதியின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். இந்த தொகுதியில் பிரசாரத்தில்




ஈடுபட்ட இந்த ஐந்து நாட்களில் வாக்காளர்களிடமிருந்து இவ்வளவு ஆதரவு கிடைக்கும் என்று தாம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை எனக் கூறிய அவர், இத்தொகுதிக்கான ஹராப்பான் வேட்பாளர் தாம் என்பதை இங்குள்ளவர்கள் அறிந்துள்ளனர் என்றார்.

இந்த தொகுதியில் போட்டியிடும் கட்சிகள் குறித்து அம்பாங் மக்கள் நன்கு அறிந்துள்ளனர். நான் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு முன்னரே ஹராப்பான் வேட்பாளர் நான் என்பதை அவர்கள் அறிந்து கொள்கின்றனர். கெஅடிலான் கட்சி வேட்பாளர் என்றார் அவர்களுக்கு நன்கு தெரிகிறது என்றார் அவர்.சிலாங்கூர் மாநிலத்தின் பத்து தீகா சட்டமன்ற உறுப்பினரும் வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினருமான ரோட்சியா பார்ட்டி பங்சா மலேசியா கட்சியின் சார்பில் இத்தொகுதியை தக்க வைத்துக் கொள்ள போட்டியிடும் டத்தோ ஜுரைடா கமாருடினிடமிருந்து கடும் போட்டியை எதிர்நோக்குகிறார்.

## முட்டை பற்றாக்குறையா? மாநில அரசின் மலிவு விற்பனைக்கு வாருங்கள்

# ஹராப்பான் வேட்பாளர் வேண்டுகோள்

உலு லங்காட்:-

உலு லங்காட் தொகுதியில் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்டு வரும் தேர்தல் பிரசாரத்தின் போது இங்கு முட்டைப் பற்றாக்குறை நிலவுவதை தாம் கண்டறிந்ததாக அத்தொகுதிக்கான ஹராப்பான் வேட்பாளர் முகமது சானி ஹம்சான் கூறினார்.

ஆகவே, மாநில அரசின் மலிவு விற்பனையில் கலந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை குறைந்த விலையில் வாங்கிச் செல்லும்படி தொகுதி மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.




பண்டார் ரிஞ்சிங், பண்டார் தாசேக் கெசுமா, சந்தேக்ஸ் சந்தை ஆகிய இடங்களுக்கு நான் சென்றேன். அங்கு நான் சந்தித்த வாக்காளர்கள் எல்லாம் உணவுப் பொருள் விநியோகப் பற்றாக்குறை குறித்து குறைபட்டுக் கொண்டனர்.உணவுப் பொருள் பிரச்சனையைக் கூட மத்திய அரசினால் தீர்க்க முடியவில்லை. சிலாங்கூரைப் பாருங்கள், உணவுக் கையிருப்பு போதுமான அளவு உள்ளது. அவை குறைவான விலையிலும் விற்கப்படுகின்றன. முட்டை தவிர, கோழி, இறைச்சி, சமையல் எண்ணெய், அரிசி போன்ற பொருள்களும் கிடைக்கின்றன என்றார் அவர். உணவுப் பொருள் பற்றாக்குறை இருந்தால் சிலாங்கூர் மாநில அரசின் மலிவு விற்பனையில் கலந்து கொள்ளத் தவறாதீர்கள் என்று இங்குள்ள தாமான் செம்பாக்கான் லுய் பகுதியில் பிரசாரத்தில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார். கோழிக்கான உச்சவரம்பு விலையை வெ. 11.40 ஆக நிர்ணயித்த மத்திய அரசின் நடவடிக்கையையும் அவர் கடுமையாகச் சாடினார்.

முன்பு பக்கத்தான் ஹராப்பான் ஆட்சியில் கோழியின் விலை ஒரு கிலோ வெ.5.99 ஆக இருந்தது. அப்போது விலை அதிகம் என்று குறை கூறினார்கள். இப்போது மலிவான விலையிலா விற்கப்படுகிறது என அவர் கேள்வியெழுப்பினார்.

# வேலை தேடி வெளியூர் செல்லும் இளையோர் பிரச்னைக்கு முன்னுரிமை

## சுங்கை புசார் ஹராப்பான் வேட்பாளர் கூறுகிறார்

சுங்கை புசார்:
சிறப்பான வேலை வாய்ப்பினை பெறுவதற்காக சுங்கை புசார் தொகுதியை விட்டு வெளியே செல்லும் இளைஞர்கள் விவகாரத்தில் தாம் கவனம் செலுத்தவுள்ளதாக அத்தொகுதிக்கான பக்கத்தான் ஹராப்பான் வேட்பாளர் சைபுல்யாஸான் எம். யூசுப் கூறினார். இப்பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் மேம்பாட்டிற்கான வாய்ப்புள்ள தொழில் துறை ஒருங்கமைப்பை ஏற்படுத்தவுள்ளதாக அவர் சொன்னார். சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை, சுற்றுலா, கல்வி உள்ளிட்ட வாய்ப்புகள் இங்கு குறைவாக உள்ளதை காண முடிகிறது என்று அவர் குறிப்பிட்டார். இதன் அடிப்படையில் சுங்கை புசார் தொகுதிக்கான ஹராப்பான் கூட்டணியின் பத்து அம்ச வாக்குறுதியில் இங்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதையும் உள்ளடக்கியுள்ளோம் என்றார்




அவர். இத்தொகுதியில் தொழில்துறை ஒருங்கமைப்பு உருவாக்கப்படும் போது தேவைப்படும் ஆள்பலத்தை ஈடுசெய்வதற்கு ஏதுவாக இங்குள்ள இளைஞர்களுக்கு அவர்கள் சார்ந்த துறைகளில் திறன் பயிற்சிகளை வழங்குவதிலும் தாம் கவனம் செலுத்தவுள்ளதாக அவர் மேலும் சொன்னார்.
இது தவிர, கால்நடை வளர்ப்பு மற்றும் நவீன விவசாயத்தில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் விஷயத்திலும் தாம் கவனம் செலுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பந்திங் மருத்துவமனை சேவை தரத்தை மேம்படுத்துவேன்

## கோல லங்காட் வேட்பாளர் மணிவண்ணன் வாக்குறுதி




கோல லங்காட்:-
கோல லங்காட் நாடாளுமன்றத் தொகுதியில் பக்கத்தான் ஹராப்பன் கூட்டணி சார்பில் போட்டியிடும் மணிவண்ணன் கோவிந்த் தொகுதி மக்களுக்காக ஆறு வாக்குறுதிகளை முன்வைத்துள்ளார்.பந்திங் மருத்துவமனை மற்றும் சுகாதார கிளினிக்குகளின் சேவைத் தரத்தை மேம்படுத்துவதும் அந்த வாக்குறுதிகளில் ஒன்றாகும்.
மூத்த குடிமக்கள், சிறார்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் சேவையை பெறும் நிலையிலுள்ள நோயாளிகள் உள்பட அனைத்து மக்களுக்கும் விரிவான அளவில் மருத்துவ சிகிச்சை கிடைப்பதை தாம் உறுதி செய்ய விரும்புவதாக மணிவண்ணன் கூறினார்.

இது தவிர, அடிப்படை வசதிகள் திருப்தியளிக்கும் வகையில் உள்ளதை தாம் உறுதி செய்ய விரும்புவதோடு கோல லங்காட்டில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசல் பிரச்னைக்கு தீர்வு காண விரிவான கொள்கையை அறிமுகப்படுத்தவும் தாம் திட்டமிட்டுள்ளதாக அவர் சொன்னார்.
கோல லங்காட்டின் கௌரவம் எனும் தலைப்பிலான தனது கொள்கையறிக்கை முழுமையான வெள்ளப் தடுப்புத் திட்டங்கள், வடிகால்களை தரம் உயர்த்துவது மற்றும் வெள்ள முன்னெச்சரிக்கை முறை ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது என அவர் குறிப்பிட்டார். அதோடு மட்டுமின்றி, தொலைநோக்கும் ஆற்றலும் நிறைந்த இளைய தலைமுறையினரின் உருவாக்கத்திற்காக ஆரம்ப மற்றும் இடைநிலைப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் உகந்த சூழலில் இருப்பதை தாம் உறுதி செய்ய விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.மகளிரின் நலன் காக்கப்படுவதற்கும் அவர்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் உயர்வு காண்பதற்கும் ஏதுவாக கிளப் காசே வனிதா கோல லங்காட் எனும் அமைப்பு உருவாக்கப்படும் என்றத் தகவலையும் மணிவண்ணன் வெளியிட்டார். விளையாட்டுத் துறையில் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிப்பதற்காக மின் விளையாட்டுத் தொகுதி மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தயத் திடல் அமைப்பதற்கும் தாம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.
பதினைந்தாவது பொதுத் தேர்தலில் கோல லங்காட் தொகுதியில் ஆறு முனைப் போட்டி நிலவுகிறது. இத்தொகுதியில் பாஸ் கட்சி வேட்பாளர் டத்தோ டாக்டர் யூனுஸ் ஹைறியிடமிருந்து மணிவண்ணன் கடும் போட்டியை எதிர்நோக்குகிறார்.



# வாக்காளர்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள், மக்கள் பிரச்சினையில் அக்கறையுள்ள வேட்பாளர்களை தேர்வு செய்யுங்கள்



ஷா ஆலம்:-
சுங்கை புசார் நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பாலான வாக்காளர்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறித்து அக்கறை கொண்டு, மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய அரசாங்கத்தை விரும்புகின்றனர். இந்தப் பிரச்சினையை கையாள்வதில் மத்திய அரசின் அக்கறையின்மையால் பலர் சங்கடமாக இருப்பதாக கண்டறியப்பட்டது என்று இப்பகுதிக்கான பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் கூறினார்.
"சராசரியாக வாழ்க்கைச் செலவு மற்றும் மக்களின் பொருளாதாரத்தில் அக்கறை கொண்ட அரசாங்க சீர்திருத்தத்தை விரும்பும் மக்கள், வர்த்தகர்கள் மற்றும் இளைஞர்களைச் சந்திக்க நான் களத்திற்குச் சென்றேன். அதன்படி, வாக்காளர்கள் மாற்றத்தை விரும்புவார்கள் என்றும், மக்கள் பிரச்சனைகளில் அக்கறை காட்டக்கூடிய ஹராப்பானுக்கு வாக்களிப்பார்கள் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்" என்று சைபோலியாசன் எம் யூசோப் நேற்று சந்தித்தபோது கூறினார்.
அதற்கு முன், அவரும் அவரது குழுவும் உள்ளூர் மக்களைச் சந்திக்க நடந்து சென்று, சபாக் பெர்ணம், சிகிஞ்சான் நகரைச் சுற்றி பிரச்சார பிரசுரங்களை விநியோகித்தனர்.இதற்கிடையில், சைபோலியாசன் தனது அனுபவத்தை முழுமையாக பயன்படுத்துகிறார், அதே நேரத்தில் சிலாங்கூர் சக்காட் வாரியத்தை வழிநடத்தி, தேவைப்படுபவர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த தொடர்ந்து உதவுவார். இத்தேர்தலில் நாலு முனைப் போட்டியில் அவர் சுங்கை புசார் பிரிவு அம்னோ தலைவர் டத்தோஸ்ரீ ஜமால் முகமது யுனோஸை (பாரிசான் நேஷனல்) எதிர்கொள்கிறார்.

# கோல சிலாங்கூரில் மக்கள் பிரச்னையைக் களைந்து மேம்பாட்டை உறுதி செய்வேன்

## டாக்டர் ஜுல்கிப்ளி உறுதி

கோல சிலாங்கூர்:-
கோல சிலாங்கூர் தொகுதியில் பழைய வாக்காளர்களின் ஆதரவை தக்க வைத்துக் கொள்ளும் அதே வேளையில் முதன் முறையாக இத்தேர்லில் வாக்களிக்கும் இளம் தலைமுறையினரை ஈர்ப்பதிலும் தாம் முனைப்பு காட்டவுள்ளதாக அத்தொகுதிக்கான ஹராப்பான் வேட்பாளர் கூறுகிறார்.தாம் சார்ந்துள்ள தொகுதியில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளைக் களைவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வரப்போவதாக முன்னாள் சுகாதார அமைச்சருமான அவர் தெரிவித்தார்.நான் மக்களுடன் அணுக்கமாக இருக்கும் அதேவேளையில் அவர்களுடன் எப்போதும் இருப்பேன் என்பதையும் உணர்த்த விரும்புகிறேன் என்று அவர்



குறிப்பிட்டார்.இத்தொகுதியில் நிதியமைச்சரும் தேசிய முன்னணி வேட்பாளருமான டத்தோஸ்ரீ தெங்கு ஸப்ருள் தெங்கு அப்துல் அஜிசை எதிர்த்து டாக்டர் ஜுல்கிப்ளி போட்டியிடுகிறார்.தெங்கு ஸப்ருள் தவிர்த்து பெரிகத்தான் நேஷனல் வேட்பாளர் முகமது நோர் முகமது சஹார், பெஜுவாங் வேட்பாளர் முகமது சாய்ட் ரோஸ்லி ஆகியோரும் இத்தொகுதியில் போட்டியிடுகின்றனர்.கடந்த 2008 ஆம் ஆண்டில் 862 வாக்குகள் பெரும்பான்மையிலும் கடந்த 2015 ஆம் ஆண்டு 8,498 வாக்குகள் பெரும்பான்மையிலும் ஜுல்கிப்ளி இத்தொகுதியில் வெற்றி பெற்றார்




தொகுதி பக்கத்தான் ஹறாப்பான் வேட்பாளர் டாக்டர் சத்திய பிரகாஷ் நடராஜன் கூறினார்.

இதன் காரணமாகவே இலவச மருத்துவ வசதி தேவை என்று நான் வலியுறுத்துகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீண்டகால அடிப்படையில் அதாவது 15 ஆண்டுகளில் இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என அவர் தெரிவித்தார். நமக்கு மன உளைச்சல் குறையும். பிரச்சனைக்கு தீர்வு காணும் பட்சத்தில் நோய்கள் அண்டாது என்று ரவாங், சுங்கை சோ நடவடிக்கை அறையில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில்

# மக்களுக்கு இலவச மருத்துவ வசதி கிடைக்கப் போராடுவேன் உலு சிலாங்கூர் வேட்பாளர் டாக்டர் சத்தியா உறுதி

உலு சிலாங்கூர்:-

உலு சிலாங்கூர் தொகுதியில் பக்கத்தான் ஹறாப்பான் வெற்றி பெற்றால் அது முன்னெடுக்கும் திட்டங்களில் இலவச சுகாதாரம் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது ஆகியவையும் அடங்கும்.

தமது இந்த நீண்ட காலத் திட்டத்தின் மூலம் காப்புறுதி பாதுகாப்பை பெற இயலாத மக்களின் சுமையைக் குறைக்க இயலும் என்று அவர் தெரிவித்தார். கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் கெஅடிலான் உறுப்பினராக இருந்து வரும் டாக்டர் சத்தியபிரகாஷ் இத்தேர்தலில் மும்முனைப் போட்டியை எதிர்நோக்குகிறார்.

# தே.மு. கோட்டையான தஞ்சோங் காராங்கில் களம் காண மூடா கட்சி வேட்பாளர் அஞ்சவில்லை



தஞ்சோங் காராங்:-

தேசிய முன்னணியின் கோட்டையாக விளங்கும் தஞ்சோங் காராங்கில் போட்டியிட மலேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் (மூடா) வேட்பாளரான சித்தி ரஹாயும் பாஹ்ரின் சிறிதும் அஞ்சவில்லை. எது எப்படி இருப்பினும் வரும் 19 ஆம் தேதி நடைபெறும் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையைத் தாம் கொண்டுள்ளதாக சேகு ரஹாயு என அடைமொழியுடன் அழைக்கப்படும் அவர் சொன்னார்.

இத்தேர்தலில் தஞ்சோங் காராங் தொகுதியை தேசிய முன்னணியிடமிருந்து வெல்வது அவ்வளவு எளிதான காரியமல்ல. எனினும் கண்ணியத்துடனும் முழு அர்ப்பண உணர்வுடனும் பிரசாரம் செய்வதன் மூலம் இத்தொகுதியில் சாதனை படைக்க முடியும் என நம்புகிறேன் என அவர் குறிப்பிட்டார். தங்கள் மீது முழு நம்பிக்கை வைத்துள்ள ஆதரவாளர்களை தேசிய முன்னணி கொண்டுள்ளது. இதனை அவ்வளவு எளிதாக மாற்றி விட முடியாது. கண்ணியத்துடனும் முழு அர்ப்பணிப்புடனும் பிரசாரம் செய்வதன் மூலம் நாம் நிர்ணயித்த இலக்கை அடைய முடியும் என அவர் கூறினார்.

தஞ்சோங் காராங் தொகுதிக்கு நான் செய்ய நினைப்பதை தொகுதி மக்கள் மதிப்பீடு செய்து என்னைத் தேர்ந்தெடுப்பார்கள் என நம்புகிறேன் என்று நேற்று இங்கு நடைபெற்ற மூடா கட்சியின் பிரசார நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

தாம் உள்ளூர் வேட்பாளர் அல்ல என்ற குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், மக்களுக்கு சேவையாற்றுவதில் இது ஒரு தடையாக இருக்காது என்றார். தற்போதுள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட தொகுதியைச் சாராதவர்கள்தான். இருந்த போதிலும் சிறப்பான சேவையை வழங்கி வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**

*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*




# எல்ஆர்டி பயனர்களுக்கு உதவுவதற்காக 20 ஸ்மார்ட் சிலாங்கூர் பஸ் யூனிட்களை மாநிலம் தயார் செய்துள்ளது

ஷா ஆலம்:-

கிளானா ஜெயா இலகு ரயில் போக்குவரத்து (எல்ஆர்டி) சேவை அமைப்பின் இடையூறுகளை தொடர்ந்து ஆயிரக்கணக்கான பயனர்களுக்கு உதவும் வகையில் சிலாங்கூர் ஸ்மார்ட் பேருந்துகள் மொத்தம் 20 யூனிட்கள் நாளை முதல் கிடைக்கும். அட்டவணை இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக கூடுதல் சேவை ரேபிட் கேஎல் உடன் ஒருங்கிணைக்கப்பட்டது என்று டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி விளக்கினார்.

# உலு சிலாங்கூர் வேட்பாளர் இளைஞர்களின் வேலை வாய்ப்பு மற்றும் திவால் ஆகிய பிரச்சனைகளை தீவிரமாக எடுத்துக் கொள்கிறார்கள்

உலு சிலாங்கூர்:-

உலு சிலாங்கூர் பக்காத்தான் ஹறாப்பான் வேட்பாளர்கள் இளைஞர்கள் மத்தியில் வேலை வாய்ப்பு பிரச்சினையை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

டாக்டர் சத்திய பிரகாஷ் நடராஜன், இளைஞர்களுக்கு சரியான வாய்ப்பு, பயிற்சியும், வழிகாட்டுதலும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

"உலு சிலாங்கூரில் 5,000க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன, ஆனால் அவைகளில் பெரும்பாலும் வெளிநாட்டினர் வேலை செய்கிறார்கள். மலேசிய இளைஞர்கள் சோம்பேறிகள் என்ற சாக்குப்போக்கு கூறப்பட்டாலும் நமது இளைஞர்களுக்கு தகுதியான வேலைகள் வழங்கப்பட வில்லை என்றார் அவர்.

"சரியான வழிகாட்டுதல், சரியான பயிற்சி கொடுக்கப்பட்டால், நம் இளைஞர்கள் சோம்பேறிகள் என்று சாட வேண்டிய அவசியம் இருக்காது என்றார் அவர். இங்குள்ள சுங்கை சோ தேர்தல் இயக்க அறையில் சந்தித்த போது கூறினார்.

மேலும், இளைஞர்கள் சார்ந்த கிரெடிட் கார்டுகளால் திவாலாகும் பிரச்சனையை அப்படியே விட்டு விடக் கூடாது என்றார் டாக்டர் சத்யா.

சம்பந்தப்பட்ட குழுவுக்கு நிதி மேலாண்மை அறிவை வழங்க ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார்.

"எனக்கு கிரெடிட் கார்டு கொடுத்தார்கள், இப்போது நான் திவாலாகிவிட்டேன் என்று சொன்ன ஒரு இளைஞர் குழுவை நான் ஒரு முறை சந்தித்தேன். இது யாருடைய தவறு? இளைஞர்களின் தவறா? கிரெடிட் கார்டுகளை எப்படி பயன்படுத்துவது என்று இளைஞர்களுக்குத் தெரியாது.

"இளைஞர்கள் நிதி அறிவு திறன் கொண்டவர்களாக இருக்க, எதற்கு கடன் வாங்க வேண்டும், எதற்கு கடன் வாங்க கூடாது என்பதை வழிகாட்டும் அமைப்பை உருவாக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது," என்று அவர் கூறினார்.




2008 ஆம் ஆண்டு முதல் கட்சியின் உறுப்பினராக இருந்து வரும் டாக்டர் சத்தியா, உலு சிலாங்கூர் நாடாளுமன்ற தொகுதியில் ஆறு முனை போட்டியை எதிர்கொள்கிறார்.

# உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ளுங்கள்

மொத்தம் 21 பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர்களும் ஒரு மலேசிய ஜனநாயகக் கூட்டணி(மூடா) வேட்பாளரும் சிலாங்கூரில் நாடாளுமன்றத் தொகுதியைப் பாதுகாக்கப்போட்டியிடுகிறார்கள். புதிய மற்றும் பழைய முகங்களின் கூட்டணியில், இந்த 22 நாடாளுமன்றஇடங்கள் டேவான் ராக்யாட்டில் உரத்த குரலாக இருக்க முடியும் என்பதில் ஹராப்பான் உறுதி கொள்கிறது. சிலாங்கூரில் ஹராப்பான் வேட்பாளர்களின் சுருக்கமான பின்னணி கீழேகொடுக்கப்பட்டுள்ளது.

## P092 சபாக் பெர்ணம்

**ஹாஜி சம்சுல் மாரிஃப் இஸ்மாயில்**



58 வயது

**வாழ்க்கை வரலாறு**
கல்வியாளர் மற்றும் வணிக உறுப்பினர்

**அரசியல் நிலை**
அமானா 1 துணை தலைவர்

HARAPAN X

## P093 சுங்கை புசார்

**ஹாஜி சைபோல்யாசான் மாட் யூசுப்**



52 வயது

**வாழ்க்கை வரலாறு**
சிலாங்கூர் சக்காட் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி

**அரசியல் நிலை**
கெஅடிலான் கட்சி உறுப்பினர்

HARAPAN X

## P094 உலு சிலாங்கூர்

**டாக்டர் சத்தியபிரகாஷ் நடராஜன்**



45 வயது

**வாழ்க்கை வரலாறு**
மருத்துவ அதிகாரி

**அரசியல் நிலை**
உலு சிலாங்கூர் ஹராப்பான் கட்சி தலைவர்

HARAPAN X

## P095 தஞ்சோங் காராங்

**ஆசிரியர் ராஹ்யு**



46 வயது


**வாழ்க்கை வரலாறு**
ஆசிரியர் மற்றும் எழுத்தாளர்

**அரசியல் நிலை**
மூடா கட்சி உறுப்பினர்

MUDA X

## P096 கோலா சிலாங்கூர்

**டத்தோ ஸ்ரீ டாக்டர் ஜுல்கிப்ளி அகமது**



66 வயது

**வாழ்க்கை வரலாறு**
பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும் நிறுவனத்தின் இயக்குநர்

**அரசியல் நிலை**
அமானா மூலோபாய இயக்குனர் மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சர்

HARAPAN X

## P097 செலாயாங்

**வில்லியம் லியோங் ஜீ கீன்**



65 வயது

**வாழ்க்கை வரலாறு**
வழக்கறிஞர் மற்றும் வழக்குரைஞர்

**அரசியல் நிலை**
தேசிய நிதி கணக்கு குழு உறுப்பினர்

HARAPAN X

## P098 கோம்பாக்

**அமிருடின் ஷாரி**



42 வயது

**வாழ்க்கை வரலாறு**
ஆர்வலர் மற்றும் நிறுவனத்தின் இயக்குநர் குழுவின் உறுப்பினர்

**அரசியல் நிலை**
சிலாங்கூரின் டத்தோ மந்திரி புசார்

HARAPAN X

## P099 அம்பாங்

**ரோட்சியா இஸ்மாயில்**



58 வயது

**வாழ்க்கை வரலாறு**
குழந்தை பராமரிப்பு மைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆலோசகர்

**அரசியல் நிலை**
சிலாங்கூர் ஹராப்பான் மகளிர் அணி தலைவி மற்றும் மாநில அரசின் ஆட்சிக்குழு உறுப்பினர்

HARAPAN X

## P100 பாண்டான்

**ரபிஸி ரம்லி**



45 வயது

**வாழ்க்கை வரலாறு**
பெட்ரோனாஸ் அகழ்வாராய்ச்சி எஸ்டிஎன் பிஎச்டி இன் மூத்த மேலாளர்

**அரசியல் நிலை**
கெஅடிலான் துணைத் தலைவர்

HARAPAN X

## P101 உலு லங்காட்

**முகமது சானி ஹம்சான்**



46 வயது

**வாழ்க்கை வரலாறு**
ஆசிரியர் மற்றும் நிறுவனத்தின் இயக்குநர் குழுவின் உறுப்பினர்

**அரசியல் நிலை**
மலேசிய ஹராப்பான் இளைஞர் அணி துணைத் தலைவர்

HARAPAN X

## P102 பாங்கி
### ஷியோர்ட்ஸான் பின் ஜோஹான்



39 வயது

**வாழ்க்கை வரலாறு**
வழக்கறிஞர் மற்றும் ஆர்வலர்

**அரசியல் நிலை**
டிஏபி ஆலோசகர் லிம் கிட் சியாகின் அரசியல் செயலாளர்

## P103 பூச்சோங்
### இயோ பீ இன்



39 வயது

**வாழ்க்கை வரலாறு**
எண்ணெய் ஆய்வு நிறுவன பொறியாளர்

**அரசியல் நிலை**
டிஏபி மகளிர் அணியின் தேசிய பொருளாளர் மற்றும் முன்னாள் எரிசக்தி, தொழில்நுட்பம், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்

## P104 சுபாங்
### வோங் சென்



54 வயது

**வாழ்க்கை வரலாறு**
வழக்கறிஞர்

**அரசியல் நிலை**
மத்திய தலைமைக் குழு உறுப்பினர் - கெஅடிலான் கொள்கை தலைவர்

## P105 பெட்டாலிங் ஜெயா
### லீ சியோன் சுங்



41 வயது

**வாழ்க்கை வரலாறு**
குவாந்தன் துறைமுக இயக்குநர் குழுவின் உறுப்பினர்

**அரசியல் நிலை**
கெஅடிலான் மத்திய தகவல் தொடர்பு இயக்குனர்

## P106 டாமன்சாரா
### கோபிந்த் சிங் டியோ



49 வயது

**வாழ்க்கை வரலாறு**
பிரதிவாதி வழக்கறிஞர்

**அரசியல் நிலை**
டிஏபி துணைத் தலைவர் மற்றும் முன்னாள் தகவல் தொடர்பு மற்றும் மல்டிமீடியா அமைச்சர்

## P107 சுங்கை பூலோ
### ரமணன் ராமகிருஷ்ணன்



42 வயது

**வாழ்க்கை வரலாறு**
தொழிலதிபர்

**அரசியல் நிலை**
கெஅடிலான் தகவல் பிரிவு துணைத் தலைவர்

## P108 ஷா ஆலம்
### அஸ்லி யூசுப்



55 வயது

**வாழ்க்கை வரலாறு**
கோலாலம்பூர் கால்பந்து சங்கத்தின் துணைத் தலைவர்

**அரசியல் நிலை**
அமானா சிலாங்கூர் துணைத் தலைவர்

## P109 காப்பார்
### அப்துல்லா சானி



60 வயது

**வாழ்க்கை வரலாறு**
ராயல் சிலாங்கூர் கோல்ஃப் கிளப் அதிகாரி

**அரசியல் நிலை**
கெஅடிலான் தொழிலாளர் விவகாரக்குழு தலைவர்

## P110 கிள்ளான்
### கணபதிராவ் த/பெ வீரமன்



49 வயது

**வாழ்க்கை வரலாறு**
வழக்கறிஞர்

**அரசியல் நிலை**
டிஏபி துணைத் தலைவர் மற்றும் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்

## P111 கோத்தா ராஜா
### முகமது சாபு



68 வயது

**வாழ்க்கை வரலாறு**
ஆர்வலர் மற்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கக் குழுவின் உறுப்பினர்

**அரசியல் நிலை**
முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அமானாவின் தலைவர்

## P112 கோல லங்காட்
### மணிவண்ணன் கோவின்



46 வயது

**வாழ்க்கை வரலாறு**
தனியார் கல்லூரி விரிவுரையாளர் மற்றும் வழக்கறிஞர்

**அரசியல் நிலை**
கெஅடிலான் மத்திய தலைமைக்குழு உறுப்பினர்

## P113 சிப்பாங்
### அய்மான் அதிரா



50 வயது

**வாழ்க்கை வரலாறு**
அரசியல் ஆர்வலர்

**அரசியல் நிலை**
அமானா மகளிர் படைத் தலைவி மற்றும் ஹராப்பான் மகளிர் அணி தலைவி

# முன்னேற்றகரமான நாடாக ஆக வேண்டுமா? இன அரசியலை நிராகரியுங்கள்-அமிருடின் வலியுறுத்து

கோம்பாக்:-

மக்களுக்கிடையே தப்பெண்ணத்தையும் சந்தேக உணர்வையும் ஏற்படுத்தி அதன் விளைவாக நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையை உருவாக்கும் இனவாத அரசியலை மலேசியர்கள் நிராகரிக்க வேண்டும் என டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கேட்டுக் கொண்டார்.

கடந்த 2018ஆம் ஆண்டில் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி புத்ராஜெயாவை கைப்பற்றிய போது இந்த மோசமான அணுகுமுறையை களைவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதாக சிலாங்கூர் மாநில பக்கத்தான் ஹராப்பான் தலைவரான அவர் சொன்னார்.

எனினும், குறுகிய காலத்தில் ஆட்சி பறிபோனதால் அந்த முயற்சிகளை தொடர முடியாமல் போனது என்று அவர் தெரிவித்தார். அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இஸ்லாம் மற்றும் மலாய் ஆட்சியாளர்களின் சிறப்புரிமையை ஒரு சில தரப்பினர் கூறுவது போல் யாராலும் ஒருபோதும் எதிர்க்க முடியாது என்றும் அவர் கூறினார். ஆனாலும், நமது மனதில் தொடர்ந்து குழப்பம் விளைவிக்கப்பட்டு வருகிறது. சினமூட்டும் வகையில் அரசியல் தீ பற்றவைக்கப்படுகிறது. இதனால் சந்தேக மற்றும் பய உணர்வு ஏற்படுகிறது என அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய செயல்கள் நமது முன்னேற்றத்தை தடுக்கின்றன. 2018ஆம் ஆண்டில் மலாய், சீன மற்றும் இந்திய சமூகங்கள் ஒன்றிணைந்து ஊழலுக்கு எதிராக போராட்டம் நடத்தின. அதன் விளைவாக இதற்கு முன் எப்போதும் நிகழ்ந்திராத 1எம்டிபி ஊழல் அம்பலத்திற்கு வந்தது என்றார் அவர்.

இங்கு மூடா கட்சித் தலைவர் சைட் சடிக் சைட் அப்துல் ரஹ்மானுடன்



கோம்பாக் இளைஞர்கள் எனும் நிகழ்வில் உரையாற்றிய போது சிலாங்கூர் மந்திரி புசாருமான அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னேற வேண்டும் என்ற வேட்கை நமக்கு இருக்குமானால் அடையாள அரசியல் அல்லது இனவாத அரசியலை நாம் புறந்தள்ள வேண்டும். சந்தேக உணர்வு இருக்கும்வரை இளையோர் மனதில் சலனம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் என்று அவர் மேலும் சொன்னார்.




## பிரச்சார சுவரொட்டிகள் கிழிந்துள்ளது, வேட்பாளர்கள் சிசிடிவி காட்சிகளை பகிருமாறு குடியிருப்பாளர்களை கேட்கிறார்கள்

ஷா ஆலம்:-

செகாம்புட்டில் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர்களின் முகங்களைக் காட்டும் பல சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பலகைகள் பொறுப்பற்ற நபர்களால் சேதப்படுத்தப்பட்டன. பல இடங்களில் ஹன்னா யோஹ்வின் பிரச்சார சுவரொட்டிகள், கொடி மற்றும் வேட்பாளர் படங்கள்  கிழிக்கப்பட்டு, வெட்டப்பட்டிருந்தது என்று ட்விட்டர் மூலம் அவர் தெரிவித்தார். “தாமான் துன் டாக்டர் இஸ்மாயில் (கூகூனுஜ) இன் குடியிருப்பாளர்கள் இன்று காலை ஹராப்பான் கொடி வெட்ட பட்டதாகவும், எனது விளம்பர பலகை பல இடங்களில் சேதப்படுத்தப் பட்டதாகவும் தெரிவித்தனர்.

## வேலை இழந்தவர்களுக்கு ஹராப்பான் நலன்புரி உத்தரவாதத்திற்கும் சிறப்பு கொடுப்பனவை வழங்குகிறது

உலு சிலாங்கூர்:-

பக்காத்தான் ஹராப்பான் முன்முயற்சியானது, தொழிலாளர் வர்க்கத்தின் தலைவிதியையும் நலனையும் காக்க முடியும் என நம்பப்படும் வேலைகளை இழந்த நபர்களுக்கு சிறப்பு கொடுப்பனவை வழங்குகிறது.31 வயதான பிசியோதெரபிஸ்ட் ராஜா சியாஸ்வானி அஸ்தயண்டி ராஜா யூனுஸ், இந்த நடவடிக்கை பாதிக்கப்பட்ட நபர்கள் நிரந்தர வேலை பெறும் போது தொடர்ந்து வாழ உதவுகிறது என்றார். “தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் வேலை கிடைப்பதில் சிரமம் இருப்பதால் வேலை இழந்தவர்களுக்கு சிறப்பு உதவித்தொகை வழங்குவது நிச்சயம் நிவாரணம் தரும்.“குறைந்த பட்சம் அந்த உதவியால், அவர்கள் தங்கள் மாதாந்திர கடமைகளை நிறைவேற்றலாம் மற்றும் அவர்களின் நிதிகளை புத்திசாலித்தனமாக திட்டமிடலாம்,” என்று அவர் கூறினார்.



ஆசிரியர் ஹஸ்லிண்டா ஹாசன், 53, டிஜிட்டல் மார்க்கெட்டிங் அல்லது பொது உள்கட்டமைப்பு போன்ற பயிற்சி திட்டங்கள் நாட்டின் தொழில்நுட்ப ஆற்றல் தேவைகளுக்கு ஏற்ப வேலை இழந்த நபர்களுக்கு கூடுதல் மதிப்பை வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். “இது போன்ற புதிய திறன்கள் சந்தையில் பொருத்தமானதாக இருப்பதை உறுதி செய்வதோடு, தரம், சந்தைப்படுத்தல் ஆகியவற்றை மேம்படுத்த முடியும்,” என்று அவர் கூறினார். ஆன்லைன் வர்த்தகர், நார்லீசா கம்சா, 31, வேலை வாய்ப்புகளை வழங்குவது நல்லது என்று நினைக்கிறார், ஏனெனில் வேலையில்லாத நபர்கள் உதவித்தொகையைப் பெறும்போது புதிய வேலையைத் தேட விரும்ப மாட்டார்கள்.

“நீங்கள் ஒரு வேலையை வழங்கினால், குறைந்த பட்சம் வேலை இழந்தவர்கள் புதிய திறன்களை வளர்த்துக் கொள்ளவும், அவர்களின் ஆற்றலை உயர்த்திக் கொள்ளவும் உதவலாம், மேலும் அவர்களின் திறனை முதலாளி பார்த்த பிறகு நிரந்தர ஊழியர்களாக வைத்துக் கொள்ளலாம்” என்று அவர் கூறினார்.15வது பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, நாட்டை ஆள்வதற்கு ஆணை வழங்கப்பட்டால், புதிய வேலைகளைத் தீவிரமாக தேடும் போது, ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வேலை இழந்த நபர்களுக்கு சிறப்பு கொடுப்பனவுகள் வழங்குவது ஹராப்பான் சலுகையில் பட்டியலிடப்பட்டுள்ள முயற்சிகளில் ஒன்றாகும்.



## சுங்கை பூலோ தொகுதியில் ஹராப்பான் வேட்பாளருக்கு ஆதரவாக சிவராசா தீவிரப் பிரசாரம்

பெட்டாலிங்:-

பதினைந்தாவது பொதுத் தேர்தலில் சுங்கை பூலோ தொகுதியில்  பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளருக்கு ஆதரவாக அத்தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சிவராசா தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். தேர்தல் தொடங்கிய முதல் நாளிலிருந்தே சிவராசா மேற்கொண்டு வரும் நேர்மையான பிரசாரம் ஹராப்பான் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற நம்பிக்கையை வாக்காளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்று அக்கூட்டணியின் வேட்பாளர் டத்தோ ஆர் ரமணன் கூறினார் .

அவரது பிரச்சாரத்திற்கு பாயா ஜெராஸ் சட்டமன்ற உறுப்பினர் முகமது கைருடின் ஓத்மான் மற்றும் கோத்தா டாமன்சாரா உறுப்பினர் ஷாதிரி மன்சோர் ஆகியோரும் உதவி வருவதாக அவர் தெரிவித்தார்.

சுங்கை பூலோ நாடாளுமன்றத்தில் முந்தைய பிரதிநிதிகள் ஆற்றிய சிறப்பான சேவை ஹராப்பானுக்கு ஒரு போனஸ் ஆகும். ஏனெனில் உள்ளூர்வாசிகள் தங்கள் தொகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை உணர்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.எதிர்காலத்திலும் இந்த தொகுதியிலுள்ள அனைத்து தரப்பினரின் நலன் கருதி இந்த வளர்ச்சி தொடரும். ஆகவே, எதிர்காலத்தைப் பற்றி சிந்தியுங்கள் என்று அவர் வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டார். நவம்பர் 19 நடைபெறும் தேர்தலில் இத்தொகுதியில் ஏழு முனைப் போட்டி நிலவுகிறது. முன்னாள் சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடீன் மற்றும் ரமணனுக்கிடையிலானப் போட்டியே கடுமையானதாக கருதப்படுகிறது.1

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.